# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**மே 2010 ஜீவியம் 16 மலர் 1**

இம்மாத மலரில். . . .

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 3 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 4 |
| வாழ்க்கையை நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான மனோபாவங்களும் செயல்பாடுகளும் | 12 |
| சாவித்ரி | 21 |
| லைப் டிவைன் | 23 |
| அன்பர் கடிதம் | 46 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 48 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 57 |
| ஞானப்பால் | 59 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

### ஜீவியத்தின் ஓசை

**வாழ்விற்கு ஜீவன் உண்டு. எந்தச் செயலுக்கும் அது அதற்குரிய பதிலளிக்கும்.**

**அன்னையின் ஜீவியம் காலத்தைக் கடந்ததுஎன்பது, நெடுங்காலமாக உள்ள பிரச்சினை, அன்னையின் ஜீவியத்தால் தொடப்படும் பொழுது நொடிப்பொழுதில் கரைவதிலிருந்து நிரூபணமாகிறது.**

**உன் உலகம் முழுவதும் உன் அழைப்பிற்குள் அடங்கியது என்பதால் பிரச்சினைக்கு வழியேது?**

## இம்மாதச் செய்தி

**நாம் கைவிட்டாலும்,**

**அன்னை**

**நம்மைக் கைவிட்டதில்லை.**



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

146. *கொடுத்தால் குறையும்.*

✶ **கொடுத்தால் பெருகும்.**

147. *ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு.*

✶ **அறிவை நம்புபவனுக்குப் பலன் குறைவு.**

148. *கண் அடியிலிருந்து தப்ப முடியாது.*

✶ **தீயசக்திகளின் பார்வையினின்று தப்ப முடியாது.**

149. *ஜாதிபுத்தி போகாது.*

✶ **ஜடம் ஜடமாகவே செயல்படும்.**

150. *பெண்ணுக்கும், புடவைக்கும் துணை போகாதே.*

✶ **அறிவுரை கேட்பவருக்குச் சொல்லாதே.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தானுள்ள நிலையில் (plane) தாழ்ந்து உள்ளவர்கள் மனிதனுக்குத் தொந்தரவு செய்வது இல்லை. தன் நிலைக்குப் புறம்பானவர்கள் தொந்தரவு செய்வார்கள்.

***தாழ்ந்தவனால் தொந்தரவு இல்லை.***

***தூர இருப்பவன் தொந்தரவு தருவான்.***

# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## ✡ கிராக்கி

❀ இது சின்ன புத்தி.
தலைமுறை தலைமுறையாகப் போகாத தரித்திரம்.
திறமையுள்ளவர் வாழ்வில் பெரும்பலன் பெறுவார்கள்.

**அவர்களுக்கு கிராக்கி - சிறிய புத்தி - பழக்கமிருந்தால் உச்சகட்டத்திற்குப் போவதை அது தடுக்கும்.**

30 வருஷத்திற்குமுன் அப்படிப்பட்ட அரசியல்வாதி தம் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே தலைவருக்கு அடுத்த பதவி பெற்றார். இதன்பின் 30 ஆண்டுகளாகத் தலைவராக அவர் முயன்றது பலிக்கவில்லை. அவர் அன்னை பக்தர். ஒரு முறை தலைவர் தேர்தலுக்குமுன் சமாதிக்கு வந்து பிரார்த்தனை செய்தார். அம்முறை கட்சி அவரைத் தலைவராக்க முடிவு செய்து, கூப்பிட்டனுப்பினர். ‘‘என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தால் வருவேன்’’ என்றார். கட்சித் தலைமைக்கு மனம் கசந்து மனதை மாற்றி, அடுத்தவருக்குக் கொடுத்தனர். அத்துடன் அவர் (career) அரசியல் வாழ்வு முடிந்தது.

அகந்தை, ஆணவம், அகங்காரம் egoஎன்பது சிறியது.
கிராக்கி இயல்பாக அதைச் சுருக்கும் திறனுடையது.
பரம்பரைப் பட்டினி, அறிவும் அனுபவமுமில்லாதது.
அவற்றைப் பெறமுடியாதது.

பெரியது, பெருந்தன்மையாக விசால மனப்பான்மை உடையது. அதனால் கிராக்கி செய்யமுடியாது.



பெருந்தன்மையாக நடிப்பது கிராக்கியேயாகும்.
அது கிராக்கியின் மறுபுறம்.

கிராக்கிஎன்பது அற்புதமான தமிழ்ச்சொல் (idiom in Tamil).
அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க இயலாது.

தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சி கிராக்கி.
வறண்ட பிரதேசங்களில் உள்ளமும் வறண்டுபோனால் கிராக்கி எழும். நீர்வளம், நிலவளம் உள்ள இடங்களில் மேற்சொன்ன கிராக்கியிருக்காது. திருச்சி, தஞ்சாவூரில் கிராக்கி குறைவு. அப்படியிருந்தால் அது உயர்ந்த விஷயங்களில் இருக்கும்.

காதல் கனிந்து எழுமிடத்தில் கிராக்கி சுபாவத்திலிருந்-தாலும், தானே மறையும். ஆண், பெண் காதல் உறவுள் உலகையறிய முயன்றால் தெள்ளத் தெளிவாகப் புரியும். நாம் யார்என்பது யார் மீது நமக்கு இயல்பாக ஆசை எழுகிறதுஎனக் காட்டும்.

திருடு, கயமை, தவறான நடத்தையுள்ளவர் பிள்ளைகள், தாழ்ந்த குணம் உள்ளவர்களுக்கு கவர்ச்சி அதிகம். விக்காம் கவர்ச்சிமிக்கவன்.

வசீகரம்என்பது கவர்ச்சியினின்று மாறுபட்டது.
கவர்ச்சி, மையல், உடலின்தேவை, திருட்டுஆசை, பல பெண்களை நாடும் ஆண்கள் இவற்றிற்குப் பெரும்-பான்மையான அடிப்படை தாழ்ந்த குணங்கள், திருடு, பொய் போன்றவை. இவற்றின் அடிப்படையில் எழும் காதலுக்கு வேகம் அதிகம். லிடியா, விக்காம் போலிருக்கும்.

உலகம் காதல்என்ற அனுபவத்தின் சிகரத்தைக் கண்டதில்லை. கண்டதும் காதலை உலகம் அறியும்.
சில அவற்றுள் திருமணத்தில் முடியும்.
கொஞ்ச நாளைக்குப்பின் அது வெறும்திருமணமாகும்.

கோர்ட், புரோக்கர், ஜேப்படித் திருடன், அரசியல்வாதி, வியாபாரி, கூட்டுக்குடும்பம், பேராசிரியர் குழாம் ஆகிய இடங்கள் தவறான அனுபவங்கட்கும், உயர்ந்த அனுபவங்கட்கும் சிறப்பான இடங்கள்.

மத ஸ்தாபனங்களில் நல்லதும், கெட்டதும் அதிக அளவில் கலந்திருக்கும். பொதுமக்கள் அவற்றின் உயர்ந்த நிலை கருதி தவற்றைப் பொருட்படுத்துவதில்லை.

கிராக்கி செய்ய முடியாத ஊர் நாகரீகச் சின்னம்.
கிராக்கிக்குரிய பாஷையே தனி.
எதில் கிராக்கி செய்யாமலிருக்க முடியாதோ அங்கு பெருந்தன்மையாக இருப்பது, அதுவும் ஊர் முழுவதும் அப்படியிருப்பது ராஜவம்சம். பரம்பரை ராஜபரம்பரை.
எதில் எவருமே எப்பொழுதுமே கிராக்கி செய்யக்கூடாதோ அதில் கிராக்கி செய்பவர் ''பெரிய மனிதர்''.
இந்த ஊரில் 'மனிதரில்லை' என அங்கு வந்த சாமியார் கூறினார்.

✡ **ஆழ்ந்த தியானத்திற்குப்பின் சுவையான காப்பியை மறுப்பவரை, தவறு செய்கிறார், மரியாதையின்றிப் பழகுகிறார் என நாம் நினைக்கிறோம்**

❀ ஆழ்ந்த தியானம் உடலின் சக்தியாக மாறும்.

சந்தோஷமாக மாறும்.

ஏதாவது ஒரு நல்ல அம்சமாக மாறும்.

ஒரு சிலருக்குப் பசியாக மாறும்.

அது பசியில்லை.

சக்தி உடலோடு கலக்கும்பொழுது ஏற்படும் உணர்ச்சி.

அப்பொழுது காபி சாப்பிட்டால் தியானம் கொடுத்த சக்தி உடலில் கலப்பது தவறிவிடும்.



இது அனைவருக்கும் உண்மையில்லை.

தியானம் பசியாக மாறுபவர்கட்குமட்டும் உண்மை.

அப்படிப் பசி எடுப்பவருக்கு ஒருவர் சுவையான காப்பி கொடுத்தால், சாப்பிடுவது தவறு.

சாப்பிடாவிட்டால் கொடுப்பவர் அவரைத் தவறாக நினைப்பார்.

அந்த நிலையில் கொடுப்பவர் தவறு, சாப்பிடாதவர் செய்வது சரி.

நமக்கு வேண்டியதைத் தாராதவர் எதிரி, தருபவர் நண்பர் என்பது எளிய மனம் அறிவது. தராதவர் நண்பர்என அறிய அனுபவம் - முதிர்ந்தஅனுபவம் - வேண்டும்.

இக்கருத்தை மேலும்மேலும் கருதினால், பெரிய துரோகம் செய்பவர் நெருங்கிய நண்பராவர்.

மனத்தைவிட உணர்ச்சியின் அறிவு பெரியது. இக்கருத்தை உணர ஆன்மீகப் பக்குவம் தேவை.

படிப்பு, தண்டனை, சுக்கு, விளக்கெண்ணெய், மருந்து ஆகியவற்றைத்தரும் பெற்றோர் குழந்தையின் எதிரியில்லை.

நாகரீகம் வளரும்பொழுது படிப்பு விளையாட்டாகிறது.

தண்டனைக்குரிய சிறை வசதியுள்ளதாகிறது.

மருந்து இனிக்கிறது.

வலியை anesthesia வாங்கிக் கொள்கிறது.

அரசியலில் எதிரிகள் மேடையில் இனிமையாகச் சந்திக்கின்றனர்.

இவை முதல் நிலை.

முடிவான நிலை வலி ஆனந்தமாவது.

விபசாரம் கற்பாவது.

துரோகம் நட்பாவது.

இவை உயர்ந்த எண்ணங்கள்.

அன்பு அதிகமானால் மரியாதை விலகும்.

அறிவு அதிகமானாலும் மரியாதை போகும்.

நம்பிக்கை அதிகமானால் பணத்திற்கு ரசீது கேட்க முடியாது.

நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாதவனை நம்புவது அறிவீனம்.

அப்படி நஷ்டப்படுவது புத்தி கொள்முதல்.

அத்தவற்றை செய்ததால் வரும் பலன் ஞானம்.

அது அடுத்த ஜென்மத்தில் வரும்.

அன்னையிடம் சீக்கிரம் வரும்.

உடமை, உரிமை, மரியாதை, மானம் போகாமல் யோகமில்லை.

அன்பர்கட்கு அவற்றை பக்தி காப்பாற்றிக் கொடுக்கிறது.

மரணம் பயம் தாராவிட்டால் மரணமில்லை.

இந்நோக்கில் நம் வாழ்வை அறிவது பூரண ஞானம்.

அன்னை 'என்னால் அனைவரையும் பொறுத்துக் கொள்ள முடிகிறது. கொடுமையை ரசிப்பவரைப் பொறுக்க முடியவில்லை' என்கிறார்.

கதவின் மீதுள்ள குருவி கதவைச் சார்த்தினால் கஷ்டப்படும் என்பது பகவான் மனநிலை.

✡ **எல்லாம் எல்லார்க்கும் வேண்டும் - எனக்குக் கடைசியில் கடைசிஎன்பது முதல்**
**நம்மை முதலாவதாக ஆக்க அன்னை அனைவருக்கும் உடனே கொடுத்து விடுகிறார்**

❀ 'எனக்கு முடிவில் வரட்டும்' என்பது ஒரு பொறுமையான பரந்த சுயநலமற்ற மனப்பான்மை.

காரியத்தைச் செய்வது செயலன்று, மனப்பான்மை (attitude).

மனப்பான்மைக்கு சக்தியுண்டு. மனமும் உணர்ச்சியும் சேர்ந்த சக்தியுண்டு. செயலுக்கு physical power மட்டும் உண்டு. அது உடலுக்குரியது; சிறியது.



உணர்வும், மனமும் உடலைவிட அதிக சக்தி வாய்ந்தவை.

இப்படி நினைப்பதால், எல்லோர்க்கும் *உடனே* வந்துவிடும். அத்துடன் நமக்கும் வரும்.

**நமக்காக அனைவருக்கும் வருகிறது.**

'எனக்குக் கடைசியில்' என்ற நினைவு, எல்லோருக்கும் முதலில் தருகிறது.

மனம் குதர்க்கமாக இருப்பதால் சில சமயங்களில் இப்படித் தலைகீழே நடக்கிறது.

எதிர்பார்த்தால் கிடைக்காது.

இச்சையற்றவர்க்குச் சித்திக்கும்என்பதும் அதுவே.

'என்னால் எவரைப் பற்றியும் குறை கூற முடியாது' என்ற மனம் அனைவரும் என்னை உயர்ந்தவனாகக் கருத வேண்டும் என்பதைத் தலைகீழே கூறுகிறது.

'எல்லோரும் என்னை மட்டமாக நினைக்க வேண்டும், ஏனெனில், அதுவே உண்மை' என்பதை என் மனம் என் வாயால் அனைவரையும் சந்தேகிக்கும், மட்டமாகப் பேசும்.

- இது மனம் மூலம் பேசும் பாஷை.
- மனிதனுடைய காதல் சுயநலம் நிறைந்ததுஎன்பதும் இதுவே.

  Possessiveness (தானே உடமையாக்கிக் கொள்ள வேண்டும்) உடலுக்குண்டு.

  பொருள்களை, மனிதர்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள possess செய்ய மனம் விழைகிறது.

  அது மனத்தில் உடலின் பகுதி (physical part), மிகவும் தாழ்ந்தது.

  Possessivenessக்குப் பெருமையிருந்த காலம் உண்டு.

இன்றும் ஏராளமாக அது காணப்படும்.

எவரும் எதையும் சொந்தமாக்கிக்கொள்ள முடியாது என்பதே உண்மை.

தான்மட்டும் ஒரு பொருளை ஆள வேண்டும்என்பது அல்ப குணம்.

விலக்கில்லாமல் நாமனைவரும் அப்படியே இருக்கிறோம்.

அதைப் புனிதமாக நினைக்கிறோம்.

அது மூடநம்பிக்கை.

அதுவும் உலகிலில்லாத மூடநம்பிக்கை.

மனித இலட்சியத்தின் சிகரமாக இக்குணம் கருதப்படுகிறது.

குளத்தில் ஜாதிக்கொரு துறையுண்டு, மற்றவர் துறை என்பது சிறந்த உதாரணம்.

துறை பிரிந்தாலும், குளத்து நீர் ஒன்றுதான்.

**அர்த்தமற்றதை அர்த்தமுள்ளதாக்குவது**
**அர்த்தமற்றவனுக்குள்ள அர்த்தம்.**

✡ **மனத்தில் கேள்வியுள்ளவரை, நாம் அதனுள் சிக்கியிருப்போம்**

❀ மனமுடையவன் மனிதன்.

மனம் முழுமையைத் துண்டு செய்து, துண்டைச் சிக்கலாக்கும்.

சிக்கலின் சிறப்பான மையம் மனம்.

மனம் உள்ளவரை குணம் குறையாகும்.

கேள்வி மனம் செயல்படும்வகை.

சிந்திக்க முடியாதவன் சிறியவன்.



அவன் கேள்வி சிதறிய மனம் சிறப்புறுவது.

உலகம் அதை அதிகப் பிரசங்கித்தனம்எனும்.

சிந்திப்பவனுடைய கேள்வி சிறப்பான செயல்.

அக்கேள்விக்குப் பதில் பெறும் தகுதியுண்டு.

அது கேள்வி.

அக்கேள்வி ஞானத்தை நாடும்.

அறியாதவன் கேள்விக்குப் பதில்கூற முயல்வது அறியாமை.

அறிஞனின் கேள்வியுள் பதில் புதைந்திருக்கும்.

உலகில் அறிவுள்ள கேள்வியை எழுப்பிய அறிஞர் எழவில்லை.

கேள்வி பிறந்தால், பதில் கிடைக்கும்.

எவரும் கேட்காத கேள்வியை எழுப்பி, பதில் கூறுவது ஸ்ரீ அரவிந்தம்.

*The Life Divine* புரியவில்லைஎன்பதற்கு ஒரு காரணம் வாசகர்கட்கு எழாத கேள்விகட்கு பகவான் பதில் தருகிறார்.

கேள்வி எழுப்பாத மனம் கேள்விப்படாதது.

மனம் கேள்வியை இழக்க வலிமை தேவை.

நமக்கு வலிமையுள்ள இடத்தில் கேள்வி எழாது.

பரிட்சையில் காப்பியடிப்பது சரியாஎன்ற கேள்வி எழுவதில்லை.

கேள்வியும் பதிலும் சிந்தனையின் கூறுகள்.

எழும் கேள்வி மனம் சிந்திக்கும் பாணி.

மடி நிறையப் பணமிருந்தால் மனம் நிறைய நிம்மதியிருக்கும்.

பணம் பெருத்துவரும் நிம்மதி, நல்லது செய்யாது.

பணம் பெருத்து நிம்மதி வாராமல் நிம்மதி வாராது.

பணம் அவசியம்.

பணம்மட்டும் அவசியமில்லை.

*தொடரும்....*

❀ ❀ ❀

# வாழ்க்கையை நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான மனோபாவங்களும் செயல்பாடுகளும்

N. அசோகன்

1. வெளியிலிருந்து வரும் தூண்டுதல்களுக்கு உடனே Response வழங்க வேண்டாம். எப்பொழுதுமே சற்றுப் பின்வாங்கி மறுபரிசீலனை செய்து அதன்பின்னர் Response வழங்குவது நல்லது. அப்படி பின்வாங்குவது முதல் கட்டம். சலனம் இல்லாமல் இருப்பது இரண்டாம் கட்டம். நிரந்தரச் சமநிலையை அடைவது மூன்றாம் கட்டம்.
2. Life Response என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அகம் புறத்தை நிர்ணயிக்கிறதுஎன்பதை நாம் நம்ப வேண்டும்.
3. நாமே உருவாக்கிய பணம், பதவி, அதிகாரம் ஆகியவற்றிற்கு நாமே அடிமையாவதைத் தடுக்க வேண்டும். நம் கண்டுபிடிப்பு-களைவிட நாமே முக்கியம்என்பதை உணரவேண்டும். இந்த உணர்வு வலுப்பெறுமளவிற்கு வாழ்க்கை நமக்குக் கட்டுப்படும்.
4. நம்முடைய தனித்தன்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய முடிவுகளில் உண்மை இருக்கிறதுஎன்று தெரிந்தால், நாம் போகிற பாதை சரிஎன்று தெரிந்தால், நம் முடிவில் நாம் உறுதியாக நிற்க வேண்டும். சமூகம் நம் முடிவை ஆதரிக்கவில்லைஎன்பதால் சமூகத்துடன் ஒத்துப்போவது நல்லதுஎன்று நாம் பின்வாங்கக் கூடாது. சமூகத்திற்கு அடிபணியும் அளவிற்கு வாழ்க்கை நம்மைக் கட்டுப்படுத்தும். நாம் தனித்தன்மையைக் கருதும் அளவிற்கு வாழ்க்கை நமக்குக் கட்டுப்படும்.
5. வெளித்தோற்றத்தைக் கருதாமல் உள்ளுறை சாரத்தைக் கருத வேண்டும். போலியான தோற்றத்தைக் கண்டு ஏமாறக் கூடாது. தோற்றம் சரியில்லைஎன்றாலும் உள்ளுறை விஷயம் உண்மையாக இருந்தால் அதை ஆதரிக்க நாம் தயங்கக் கூடாது.
6. வாழ்க்கை தரும் சிரமங்களையும், சவால்களையும் கண்டு மிரளக் கூடாது. தைரியமாக அவற்றை நாம் எதிர்கொள்ள வேண்டும். வாழ்க்கை தரும் சவால்களை நாம் மகிழ்ச்சியோடு எதிர்கொண்டோம்என்றால் பெரிய வெல்ல முடியாத சிரமமாகத் தென்பட்டது நம் கட்டுப்பாட்டிற்குள் வருவதைக் காணலாம்.
7. தீர்வு இல்லாத பிரச்சினை இல்லைஎன்று நமக்குத் தெரிய வேண்டும். மேலும் பெரும்பாலான பிரச்சினைகளுக்குள்ளேயே தீர்வு இருக்கிறதுஎன்பதையும் உணர வேண்டும்.
8. அன்னையின் கருத்துப்படி பார்த்தால் நாம் வாழ்க்கையை இன்முகத்துடன் வரவேற்றால் வாழ்க்கையும் நம்மை இன்முகத்துடன் வரவேற்கும்.
9. புதியதாக ஒரு முயற்சி எடுக்கும்பொழுது அது சம்பந்தப்பட்ட விவரங்களை எல்லாம் அலசி, ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். முடிவைச் செயல்படுத்தும்பொழுது அதில் முழு உற்சாகம் இருக்க வேண்டும். செயல்படும்பொழுது வேலையை நேர்த்தியாகச் செய்ய வேண்டும். எனவே, இம்மூன்றும் இருந்தால் நமக்குத் தவறாமல் வெற்றி கிடைக்கும்.
10. அதிகாரம் செலுத்த வேண்டிய இடத்தில் அதிகாரம் செலுத்தி, சுதந்திரம் கொடுக்கவேண்டிய இடத்தில் சுதந்திரம் கொடுக்க வேண்டும். இப்படி அதிகாரத்தையும், சுதந்திரத்தையும் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளத் தெரிய வேண்டும்.
11. இடையறா முன்னேற்றத்தை வாழ்க்கையினுடைய குறிக்-கோளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். கிடைத்த முன்னேற்றம் போதும்என்ற எண்ணம் வரவே கூடாது. ஓய்வெடுத்துக் கொள்ளலாம்என்று விரும்பவும் கூடாது.
12. இரகசியமான விஷயங்களை இரகசியமாகவே வைத்திருக்க வேண்டும். நம்பிக்கைக்குத் தகுதியில்லாதவர்களை நம்புவதும் தவறு. அதே சமயத்தில் நம்ப வேண்டியவர்களை நம்பாமல் சந்தேகப்படுவதும் தவறு.

13. வேலை விவரங்களில் ஒரு நேர்த்தியை வெளிப்படுத்த வேண்டும். முக்கிய முடிவுகளைச் சரியாக எடுக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அதே அளவிற்கு வேலையின் விவரங்களில் நேர்த்தி அவசியம்என்பதையும் உணர வேண்டும்.

14. எதையும் அவசரமாகவும், பதட்டமாகவும் செய்யக் கூடாது. அவசரமும், பதட்டமும் வேலையைக் கெடுக்கும். நிதானமும், திறமையும் கலந்த அணுகுமுறை வேலையை வெற்றிகரமாக முடித்துத் தரும்.

15. உடனே கிடைக்கும் ஆதாயங்களைத் தவிர்த்து நெடுங்காலக் கண்ணோட்டத்தில் எது நல்லதோ அதை குறிக்கோளாக வைத்து, சாதனைக்கானத் திட்டம் தீட்ட வேண்டும்.

16. நம்முடைய அறிவு நன்றாகச் செய்யக்கூடிய வேலைகளை நம்முடைய அறிவிடமே விடவேண்டும். அறிவால் செய்ய முடியாத வேலைகளில் நம் உள்ளெழுச்சி என்ன சொல்கிறதோ அதன்படி செயல்பட வேண்டும். இப்படி அந்தந்தக் கரணம் அது அதற்குண்டான வேலையைச் செய்துகொண்டு, ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளாமல் இருந்தால் நல்லதுஎன்று பகவான் சொல்கிறார்.

17. அன்னையின் கருத்துப்படிப் பார்த்தால் எந்த ஒரு நிகழ்ச்சி நடந்தாலும் மேலோட்டமாகமட்டும் புரிந்து கொள்ளாமல் அந்நிகழ்ச்சியின் ஆழ்ந்த உள் அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முயல வேண்டும். இப்படி ஆழ்ந்த அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ளும்பொழுது எந்த நிகழ்ச்சியும் நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வரும்.

18. எப்பொழுதும் தேவைப்படும் அளவிற்குதான் நாம் மற்றவர்களுக்கு விவரம் தரவேண்டும். தேவையில்லாமல் செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளக் கூடாது.

19. தேவையான செலவுகளை மனம் சுருங்காமல் செய்துகொண்டு வந்தோம்என்றால் பணவரவு தொடர்ந்து வந்துகொண்டே -யிருப்பதற்கு ஏதுவான வாயில்கள் நம் வாழ்க்கையில் திறந்தேயிருக்கும்.



20. நாம் செலவு செய்யும் எனர்ஜியைவிட நம் உடம்புக்குள் வரும் எனர்ஜி அதிகமாக இருக்கும்படி வைத்துக்கொள்ள வேண்டும். திட்டமிட்ட உணவு, முறையான உடற்பயிற்சி, சுத்தமான பழக்க வழக்கங்கள் மற்றும் சந்தோஷமான மனநிலை ஆகியவை நம்முடைய எனர்ஜி balance எப்பொழுதும் பாஸிட்டிவாக வைத்துக்கொள்ள உதவும். இப்படி எனர்ஜியை நமக்குச் சாதகமாக வைத்துக்கொள்வது நம்முடைய உடல்நிலை எப்பொழுதும் ஆரோக்கியமாக இருப்பதற்கு உதவும்.

21. நாம் அடுத்தவர்களை உதவி கேட்கும்பொழுது நாம் கேட்கின்ற உதவிகள் நியாயமானதாக இருக்கவேண்டும். யாரைக் கேட்கிறோமோ அவர்கள் நமக்கு நன்றாகத் தெரிந்தவர்களாக இருந்து, அவர்களுக்கு உதவும் மனப்பான்மை உண்டுஎன்பது தெரிந்திருந்தால் கேட்கின்ற உதவி கிடைக்கும்.

அதே சமயத்தில் நம்மை யாரேனும் உதவி கேட்டால் நம் சக்திக்குட்பட்ட அளவுதான் உதவி செய்ய முன்வர வேண்டும். நம் சக்திக்கு மீறிய உதவியை ஒத்துக்கொண்டால் அது நமக்கே சிரமமாகிவிடும்.

22. நாம் ஏற்றுக் கொண்டுள்ள பண்புகள், இரசனைகள் மற்றும் பழக்க வழக்கங்களுடன் ஒத்துப்போகின்ற மனிதரை நாம் திருமணம் செய்துகொள்ள வேண்டும். அத்தகைய திருமணம் நாம் எதிர்பார்க்கும் பலனைக் கொடுக்கும். இப்படியில்லாமல் இருவருடைய பண்புகளும், இரசனைகளும், பழக்க வழக்கங்களும் மாறுபட்டு இருந்தால் திருமண உறவு கசப்பான அனுபவமாக மாறிவிடும்.

23. நம்மால் முடியாதது அன்னையால் முடியாதுஎன்று அர்த்தமில்லை. நாம் அன்னைமேல் வைக்கின்ற நம்பிக்கை இப்படியொரு திடமானதாக இருக்கவேண்டும். பிரச்சினை என்று எழுந்தால் நம்முடைய பர்ஸனாலிட்டியை விலக்கி பிரச்சினையை அன்னையிடம் சமர்ப்பணம் செய்தால் அவருடைய அருள் வேகமாகச் செயல்பட்டுத் தீர்வை வழங்கும்.

24. வாழ்க்கையில் தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்க

விரும்பினால் முன்னேற்றம் தரும் சாதனைகளைப் பற்றிய விதி முறைகளைத் தெரிந்துகொண்டு அவற்றை நம் வாழ்க்கையில் விவரமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

25. அதிர்ஷ்டமும், ஐஸ்வரியமும் நம்மைத் தேடி வரும்பொழுது நம்முடைய நிதானம் கெடக்கூடாது. நிதானம் கெடாமல் இருக்கும்பட்சத்தில் நமக்கு வரும் முன்னேற்றத்தை நம்மால் சமாளிக்க முடியும். நிதானம் கெட்டுவிட்டால் வரும் முன்னேற்றத்தை நம்மால் சமாளிக்க முடியாது. அப்பட்சத்தில் வந்த அதிர்ஷ்டம் மீண்டும் விலக நேரிடும்.

26. வெளியில் கிடைக்கின்ற பொருள்வளங்களைவிட நம்முள்-ளிருக்கும் மனவளங்கள் பல மடங்கு சிறந்தவை. அதனால் நம் வெளி வாழ்க்கையின் குறைபாடுகளை நம் உள் சாமர்த்தியத்தால் வென்றுவிடலாம்.

27. அதிர்ஷ்டத்தை உற்பத்தி செய்வதற்கான விதி முறைகளைத் தெரிந்துகொண்டு நாம் வாழ்க்கையில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். வருகின்ற வாய்ப்புக்கு ஏற்றபடி நம் பர்ஸனாலிட்டியை விரிவாக்கிக்கொள்ள வேண்டுமேதவிர நம்முடைய சிறிய பர்ஸனாலிட்டிக்கு ஏற்றபடி வருகின்ற பெரிய வாய்ப்பைச் சுருக்கிக்கொள்ளக் கூடாது.

28. இருக்கின்ற பிரச்சினையைப் பற்றி எந்நேரமும் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தால் அப்பிரச்சினை மேலும் மோசமாகும். ஆன்மா அதனைப் பிடித்துள்ள பிரச்சினைகளை மறக்கும் பொழுது அப்பிரச்சினைகள் மறைந்து போகின்றனஎன்று பகவான் சொல்கிறார். அதே ரீதியில் பார்த்தால் இப்பொழுது நமக்குள்ள பிரச்சினைகளை மறந்து கவலையற்று இருந்தோம் என்றால் அப்பிரச்சினைகள் தீர்ந்து போகும்என்று தெரிகிறது.

29. எப்பொழுதும் நம்முடைய தன்னம்பிக்கையை உச்சக் கட்டத்தில் வைத்திருக்க வேண்டும். சந்தேகம், அவநம்பிக்கை ஆகியவற்றைத் தலையெடுக்கவே விடக்கூடாது. அவை தலையெடுத்தால் நம்முடைய முயற்சி கெட்டுவிடும். நம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற சூழ்நிலை நம் கட்டுப்பாட்டை மீறிவிடும்.



30. நம்முடைய உடம்பிற்கு நம்முடைய உணர்வுமையத்தினுடைய சக்தியைக் கொண்டு தெம்பு ஊட்ட வேண்டும். நம்முடைய உணர்வு மையத்தை நம்முடைய அறிவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும். நம்முடைய அறிவை நம்முடைய ஆன்மாவினுடைய நம்பிக்கைக்குக்கீழ் வைக்க வேண்டும். இப்படிச் செய்தோம்என்றால் நம்முடைய சாதனை நாம் நம்ப முடியாத அளவிற்குப் பல மடங்கு அபிவிருத்தியாவதைப் பார்க்கலாம்.

31. எது காரணம், எது விளைவுஎன்பதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானிகளைப்போல காரணத்தையும், விளைவுகளையும் தலைகீழாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

32. Physical லெவலைவிட சூட்சுமநிலை மிகவும் சக்தி வாய்ந்தது. ஆகவே ஒரு வேலையினுடைய சூட்சுமப் பாகங்களை நாம் நம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் அவ்வேலை சம்பந்தப்பட்ட physicalஆகச் செய்யவேண்டிய காரியங்கள் எல்லாம் தாமாகவே பூர்த்தியாகும்.

33. அறிவு, உற்சாகம் மற்றும் கடின உழைப்புஎன்று இவை மூன்றுமே தனித்துச் செயல்படும்பொழுது வேலை கூடி வருவதில்லை. இவை மூன்றும் ஒன்று சேர்ந்து ஒருங்கிணைந்து செயல்படும் பொழுது வேலை நிச்சயம் கூடிவரும்.

34. அன்னையின் கருத்துப்படி பார்த்தால் கடினமாக இருந்தாலும் நம்மால் அதிகபட்சம் என்ன செய்ய முடியுமோ அதை நாம் சாதிக்க வேண்டும். இந்த மனப்பான்மையுடன் நாம் செயல்படும் பொழுது முடியாதுஎன்று நினைத்த விஷயங்கள் எல்லாம் முடியும்என்ற நிலைக்கு வருவதைப் பார்க்கலாம்.

35. நாம் ஏற்றுக் கொண்ட உயர்ந்த லட்சியத்திற்கு நாம் உண்மையாக இருந்தோம்என்றால் நம்மைச் சுற்றியுள்ள சாதாரண வாழ்க்கை நமக்குக் கட்டுப்படுவதைப் பார்க்கலாம். ஆகவே வாழ்க்கை நமக்குக் கட்டுப்படுவதின் அளவுஎன்பது நம்முடைய லட்சிய ஈடுபாட்டிற்கு நாம் காட்டும் சின்ஸியாரிட்டிக்கு சமம்என்று எடுத்துக் கொள்ளலாம்.

36. வாழ்க்கை மற்ற எல்லாவற்றையும்விட அதிகாரத்திற்குக் கட்டுப்படுகிறது. ஆகவே, நாம் என்ன வேலை எடுத்துக் கொள்கிறோமோ அதற்கு இணையான அதிகாரத்தையும் சேகரம் செய்துகொள்ள வேண்டும்.

37. நாம் வீட்டில் சாதிக்க விரும்பினால் நமக்கு வாழ்க்கைத் துணையாக அமைந்தவர் நமக்கு ஒத்துழைக்க வேண்டும். அலுவலகமாக இருந்தால் நமக்கு மேலிருக்கும் அதிகாரியும், பொது வாழ்க்கையாக இருந்தால் மக்களும், சர்வதேச அரங்கமாக இருந்தால் தேசங்களும் நம் பக்கம் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும்மேல் நாம் சாதிக்க விரும்புகின்ற விஷயத்தில் உண்மையிருந்தால் வாழ்க்கையே நம் பக்கம் ஆதரவாக வரும்.

38. நாம் சாதிக்க விரும்புகின்ற விஷயம் காலத்திற்கு ஏற்றாற் போலதாக இருந்தால் நம்முடைய சாதனை அந்த அளவிற்குச் சுலபமாக இருக்கும். வாழ்க்கை தாண்டிவந்த விஷயங்களை இப்பொழுது நாம் செயல்படுத்த விரும்புகிறோம்என்றால் அந்த அளவிற்கு நம் சாதனை கடினமாகிவிடும்.

39. நாம் இதுவரையில் ஆண்டவனிடமிருந்து அனுபவித்த அருளுக்குரிய நன்றியறிதலால் நம் நெஞ்சத்தை நிரப்பினோம் என்றால் அப்படிப்பட்ட நன்றியறிதலுக்கு வானிலைகூட Response வழங்கும். அதாவது மழைகூட நாம் கேட்கும் பொழுது நமக்காகப் பெய்யும்.

40. அன்னை ஓர் அன்பருக்கு வழங்க முடிவு செய்துள்ள ஒரு விஷயம் அவரைத் தேடி உடனே வரும். ஆகவே நாம் அவரைக் கேட்கின்ற விஷயம் அவர் அனுமதிக்கக் கூடியதாக இருக்கிறதாஎன்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

41. ஒருவருடைய தகுதிக்குமீறிக் கொடுக்கும்பொழுது அவர் நம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கமாட்டார். அதே சமயத்தில் ஒருவருடைய தகுதிக்குக் குறைவாகக் கொடுத்தாலும் அப்பொழுது அவர் நம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கமாட்டார். ஆகவே, அடுத்தவருடைய ஒத்துழைப்பு நமக்கு வேண்டு-



மென்றால் அவர்களுடைய தகுதிக்கு ஏற்றமாதிரி நாம் கொடுக்க வேண்டும். கூடவோ, குறையவோ கூடாது.

42. நாம் அடுத்தவருக்கு பணம் கொடுக்க வேண்டும்என்ற நிலையிலிருந்தால் பணத்தின் கைதான் ஓங்கி இருக்கும். மற்றவர் நமக்குப் பணம் கொடுக்க வேண்டியிருந்தால் நம் கை ஓங்கியிருக்கும். ஆகவே பணத்தைத் தம் கட்டுப்-பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புகின்றவர்கள் எவரிடமும் கடன் பட்டிருக்கக் கூடாது.

43. பணமும், அதிகாரமும் அடுத்தவருடைய எதிர்ப்பிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கான பாதுகாப்பு அரண்களாகச் செயல்படக் கூடியவைகள். ஆகவே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகின்றவர்கள் பணத்தையும், அதிகாரத்தையும் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

44. சட்டம் தனக்கு ஆதரவாக இருக்க வேண்டும்என்று விரும்புகிறவர் அவருடைய பணம் சம்பந்தமான செயல்பாடுகள் எல்லாவற்றையும் recordஇல் கொண்டுவர வேண்டும். பண விஷயமாகத் தகராறு எழுந்தால் இருக்கின்ற recordகள் நமக்குச் சாதகமாகப் பேசும். அவ்வகையில் பணம் நம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்.

45. வாழ்க்கை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும் என்று விரும்புகிறவர் எப்பொழுதும் தாம் வாங்கிக் கொள்கின்ற உதவியைவிட, செய்கின்ற உதவி அதிகமாக இருக்கும்படியான நிலையில் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

46. தம்முடைய அதிகாரத்தை அடிக்கடி நிலைநிறுத்த வேண்டியிருக்காமல் தமக்குக் கீழ் இருப்பவர்கள் தாமாகவே அவரவர் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து கொண்டிருந்-தால் அப்படிப்பட்டவருக்கு அவருடைய வேலை விஷயத்தில் வாழ்க்கை முழுவதும் கட்டுப்பட்டுள்ளதாக அர்த்தமாகும்.

47. சேவை சம்பந்தப்பட்ட வேலைகளை அகந்தையில்லாமல் செய்யும் பொழுது வாழ்க்கை முழுவதும் கட்டுப்படுகிறது. ஆனால் அகந்தை தன்னுடைய விருப்பு, வெறுப்புகளோடு தலையிடும்

பொழுது சேவை சம்பந்தமான வேலை கெட்டு வாழ்க்கை கட்டுப்பாட்டைமீறிப் போகிறது.

48. ஓர் உயர்ந்த நிலையில் வாழ்க்கையை நடத்த விரும்புகின்றவர் அவருடைய பர்சனாலிட்டியின் உயர்ந்த அம்சத்திற்கு ஏற்றபடி தம்முடைய தாழ்ந்த அம்சங்களையும் மாற்ற வேண்டும். இதில் வெற்றி பெறுகின்றவர் வாழ்க்கையைத் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பார். ஆனால் ஒப்புக்காக உயர்ந்த லட்சியங்களை ஏற்றுக்கொண்டு உண்மையில் தம்முடைய தாழ்ந்த அம்சங்களைப் பாராட்டிக் கொண்டிருப்பவரால் வாழ்க்கையைத் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாது.

49. பகுதியைமட்டும் தெரிந்துகொள்ளாமல் முழுமையைத் தெரிந்து கொண்டிருப்பவருக்கு வாழ்க்கை சுலபமாகக் கட்டுப்படும்.

50. வாழ்க்கை மனிதனைவிடப் பெரியது. ஆனால், அன்னை வாழ்க்கையைவிடப் பெரியவர். ஆகவே, அன்னையை ஒருவர் தம் வாழ்க்கையின் மையமாக வைக்கும்பொழுது அவரும் வாழ்க்கையைவிட பெரியவராகிறார். அப்படிப்பட்டவருக்கு வாழ்க்கை கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எலக்ஷனில் ஜயிப்பதற்கும், அடங்காத மனைவியை அடக்குவதற்கும் முறையைப் பொறுத்தவரை வித்தியாசமில்லை.

*சிறியதற்கும் பெரியதற்கும் பொதுவான முறை.*





## P.112 Its strength can overtake joy's running feet

### ஆனந்தமெடுத்த ஓட்டத்தைப் பிடிக்கும் வலிமை

- காலம் விதித்த கதியின் தடையைத் தகர்த்தெறிந்து
- ஞானத்தின் பிடியில் ஈர்க்கும் விரைவான வலை
- பிடிபடாத ஆசைகளைப் பிடிக்கும் முறைகள்
- ஜீவன் நிறைந்த இயற்கையை எழுப்பி
- உருவமளிக்கும் நெருப்பிடம் உறுதியாய் நிற்கும்
- கனலென எழும் கடவுளின் ஸ்பர்சம் கூறும் பதில்
- தமஸின் தாக்குதலுக்கு அசையாத நிலை
- இதயம் இழந்த ஒலியைக் கேட்கும் சொல்
- ஞானக்கண்ணாகச் செயல்படும் நாநிலம்
- வண்ணமான வரிவடிவப் பாதையில் செல்லும் வழிப்போக்கன்
- அழகின் ஆன்மாவை மூலம்வரைத் தொடரும்
- அழகெனும் அடிச்சுவடு அறிவிக்கும் பாதை
- மனித இதயம் துடிக்கும் அன்பெனும் துடிப்பு
- காந்தன் முகத்தில் கனிந்த புன்னகையெனும் மகிழ்ச்சி
- ஆன்மீக ஜீவன்கள் அரவணைக்கும் அரங்கு
- அசைவற்ற சிருஷ்டியின் மேதாவிலாசம்
- சிருஷ்டியின் சிறப்பை மகிழ்விக்கும் நெகிழ்வு
- புலனுணர்வு பெற்ற புலப்படாத திருஷ்டி

✡ அனைத்துலகமுள்ள அகம் அகம்வாழும் ஆயிரம் ஆன்மாக்கள்

✡ பரந்து விரியும் பிரபஞ்சம் வரிசைப்படுத்தும் மனித ஆன்மாக்கள்

✡ அறிபவன் அறியும் ஆர்வத்தின் ஆரவாரம்

✡ சிற்பியும் சிற்பமும் இணைந்தெழும் நெகிழ்ச்சி

✡ மந்திரத்துடிப்பின் மாயம் சாதித்தது

✡ நெருங்கிவரும் ஐக்கியத்தின் பாசமான வேகம்

✡ சேர்த்த பகுதிகள் சேர்ந்துவரும் முழுமை

✡ தடுமாறும் யத்தனம் தத்தளிக்கும் திணறல்

✡ பிறவாத உரிமையின் அழியாத திறன்

✡ ஞானத்தழல் நம்முள் எழுகிறது

✡ இதயத்தின் மடிப்பில் இறங்கி வரும் ஜோதி

✡ சொர்க்கத்தைச் சொந்தமாகக் கொண்டது

✡ வையகத்தை வரவழைக்கும் திறனுடையது

✡ அபூர்வமான தழல் நெடுநேரம் எரியாது

✡ தெய்வீக உச்சியினின்று அழைப்பிற்கிணங்க வரும் சந்தோஷம்

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அறிவேயில்லாதவன், தன் விவேகத்தை வியந்து கொள்வதுபோல், யோகத்திற்கு எதிரான குணத்தை நாம் நம் உயர்ந்த யோகத்தகுதிஎன்று நினைக்கிறோம்.

***அழிவை ஆக்கலென நினைக்கும் மனிதன்.***





# லைப் டிவைன்

கர்மயோகி

## 19. வாழ்வு

**173/1:** மனம்எனில் என்னஎன்று கண்டோம். ஆதியில் அது இறைவனுடைய கருவி. மனம் சத்தியஜீவியத் தொடர்புள்ளதால் அதற்கு இறைவனின் அம்சமுண்டு. மனித வாழ்வு மூன்று லோகங்களாக - தத்துவங்களாக - உள்ளது. அவை அஞ்ஞான லோகங்கள். அவற்றுள் உயர்ந்தவன் மனிதன். சச்சிதானந்தம் குறிப்பாக, விசேஷமாகச் செயல்படுவதால் ஏற்பட்டது மனம். சிருஷ்டியின் கடைசி கட்டம் மனம். புருஷனுக்கு பல சக்திகள், பல ரூபங்களுண்டு. அவை அவனே. புருஷன் இந்த ரூபங்களினின்று பிரிந்து நிற்க உதவுவது மனம். அந்த ரூபங்களையும் மனம் பிரித்து விலக்குகிறது. தோற்றத்தில் வேறுபாட்டை ஏற்படுத்துவது மனம். ஜீவாத்மா இத்தோற்ற வேறுபாட்டை உண்மையான வேறுபாடாகக் கருதுகிறது. ஜீவாத்மா சத்தியஜீவியத்திலிருந்து விலகியதால், இது வேறுபாடாகக் காண்கிறது. பிரிவினைஎன்பதன் உற்பத்தி ஸ்தானம் இதுவே. அதிலிருந்து முடிவுவரை நாம் காணும் எல்லாப் பிரிவினைகட்கும் தாய் இதுவே. நாம் இவற்றை முரண்பாடு, எதிர்ப்பு, இரட்டைஎனக் கொள்கிறோம். ஆத்மா அஞ்ஞானத்துள் வந்தபின் ஐக்கியம் இப்படித் தெரிவது இயற்கை. மனம் சத்தியஜீவியத்தி-னின்று பிரியும் அவசியமில்லை. பிரபஞ்சத்தில் உள்ள வேறுபாடு, நம் கண்ணில் மாறுபாடாகத் தெரிகிறது. மனம் சத்தியஜீவியத்தி-

னின்று பிரிந்தவுடன் ஐக்கியம் அழிகிறது. வேறுபாட்டைப் புலன் குதர்க்கமாக அறிகிறது.

**173/2:** மனம் பிரபஞ்ச சிருஷ்டிகர்த்தா. நாம் மனத்தை இப்படி ஏற்பதில்லை. நம் மனம் அறிவது வேறு. மனம்என்பது பொருள்களை அறியும் கருவி. சக்தி சிருஷ்டித்தப் பொருள்களை அறிவது மனம். சக்தி ஜடத்தில் செயல்படுகிறது. எனவே, நாம் மனத்தை சிருஷ்டிகர்த்தாஎன ஏற்கிறோம். மனம் இரண்டாம் கட்டத்தில் சிருஷ்டிப்பதாகக் கொள்கிறோம். ஜடம் சிருஷ்டித்த ரூபங்களை மனம் இணைத்துப் புதியதாக சிருஷ்டிப்பதாகக் கொள்கிறோம். விஞ்ஞானம் புதிய விஷயங்களை நமக்கு உணர்த்துகிறது. ஜடத்துள் ஆழ்மனம் உள்ளதாக விஞ்ஞானம் கூறுகிறது. சக்தியுள் ஆழ்மனத்தை விஞ்ஞானம் காண்கிறது. இது நமக்குப் புதியதன்று. நாமிழந்த பழைய ஞானமிது. இது கண்டுபிடிப்பன்று, இழந்ததை மீண்டும் காண்பது. எனவே, மனம் வெளிப்படும் பொறுப்பு அதனுடையது. முதலில் மனம் வாழ்வின் ரூபங்களாக வெளிவருகிறது. அடுத்தாற்போல் மனம் மனத்தின் ரூபங்களாக வெளிவருகிறது. முதலில் மனம் தாவர வாழ்வில் உணர்வின் ஜீவியமாக வெளிவருகிறது. அதேபோல் வளர்ச்சி குன்றிய விலங்குகளிலும் மனம் தோன்றுகிறது. இரண்டாவதாக மனிதனிலும் வளர்ந்த விலங்கிலும் வெளிப்படுகிறது. அங்கு எப்பொழுதும் மனப்பான்மை உருவானபடியிருக்கும். ஏற்கனவே, ஜடம் சக்தியின் பொருளுருவம் எனக் கண்டோம். ஜடசக்தி மனத்தின் சக்தி ரூபம்எனக் காண்போம். ஜடசக்தி ஆழ்மன உறுதியின் செயலாகும். உறுதி நம் ஒளியில் செயல்படுகிறது. நாம் ஒளியெனக் கருதுவது இருளும் ஒளியும் கலந்ததாகும். ஜடசக்தி செயல்படுகிறது. அது இருளில் செயல்படுகிறது. நமக்கு அது இருள். நாத்திகவாதிக்கு அது இருளில்லை. அது இருளில் செயல்படுகிறது — அது அஞ்ஞான இருள். நாத்திகவாதி செயல்படும் முறையான அரங்கு அது. அங்கு அவன் ஒளியைத் தேடுகிறான். உண்மையிலும், சாரமான அடிப்படையிலும் அது இருள். நாத்திகவாதம் அதுவே தனக்குரிய அரங்கம்என எப்பொழுதும் கருதுகிறது. ஆன்மீக ஞானம் சிகரத்திலிருந்து செயல்படுகிறது. நாத்திகவாதி இன்று கண்டு-



பிடித்ததை ஆன்மீகம் அன்றே கண்டுபிடித்துவிட்டது. எனவே, நாம் கீழ்க்கண்டவாறு கூறலாம். பிரகிருதி இந்த ஜட உலகைச் சிருஷ்டித்தது. பிரகிருதி இயற்கை செயல்படும் சக்தி. ஆழ்மனம் இந்த சக்தியாக வெளிப்படுகிறது. நாம் அதை புத்தி எனலாம்.

**174/3:** மனம் சுயமானதன்று, சுதந்திரம் பெற்றதுமில்லை. இதை நாம் இப்பொழுது கண்டோம். சத்தியஜீவியத்தின் முடிவான செயல் மனம். சத்தியம்-ஜீவியம்என்பது சத்தியஜீவியம். எனவே, மனமுள்ள இடங்களிலெல்லாம் சத்தியஜீவியம் உண்டு. மீண்டும் சத்தியஜீவியம் என்றால் சத்தியம் ஜீவியம் பெற்றதாகும். ஆதலால் பிரபஞ்ச வாழ்வை உண்மையில் சிருஷ்டித்தது சத்தியஜீவியமே. சில சமயங்களில் மனம் அதன் மூலத்தினின்று பிரிந்து நிற்கும். இருந்தாலும் சத்திய ஜீவியத்தின் பெருஞ்சலனம் மனத்திலிருக்கும். சரியான உறவை முறையாக நிலைநிறுத்தும்படி மனம் வற்புறுத்தும். மனத்தின் சலனத்துள் தவிர்க்க முடியாத பலன்கள் உண்டு. அவற்றைப் பரிணாமத்தால் வெளிவரும்படி மனம் கட்டாயப்படுத்தும். விதை, மரம் எனில் சரியான விதையிலிருந்து உரிய மரம் எழுவதை அது கண்காணிக்கும். முரட்டு ஜடத்தையும் முறையாகச் செயல்படும்படி மனம் கட்டுப்படுத்தும். ஜடம் உயிரற்றது. அது இருண்ட ஜடமான சக்தி. கட்டாயத்தால் சட்டம் எழும். சட்டத்திற்குட்பட்ட உலகம் உருவாகும். மனம் பிரபஞ்சத்திலில்லாவிட்டால், பிரபஞ்சம் குழப்பம் நிறைந்ததாகும். இது முடிவான சிறப்பான சட்டமாகாது. அது செயல்படுமிடத்திற்குத் தேவையான சட்டமாக இருக்கும். உதவும் சந்தர்ப்பத்தால் நிர்ணயிக்கப்பட்டதாகும். உயர்ந்த, உச்சகட்ட சட்டமோ, நியாயமோ இல்லை. மனம் சத்தியஜீவியத்தினின்று பிரியாவிட்டால் உயர்ந்த சட்டம், நியாயம் உற்பத்தியாகும். இது இடத்திற்கேற்பட்ட ஏற்பாடு. மனத்தின் செயலுக்குரிய பலனை நிர்ணயிக்கும் சட்டமிது. மனம் பிரிக்கும் தன்மையுடையது. எதிராகப் பிரிந்து நிற்கும் நிலையை உற்பத்தி செய்வது மனத்தின் சிருஷ்டி. ஒரே சத்தியத்தின் முரணான எதிர்த்திருக்கும் பிரிவினையிது. பிரம்ம ஜீவியம் முரண்பாட்டைக் கருதி தானே முரண்பாடாக முடிவு செய்தது. தன்னைப் பாகுபாடு செய்து வெளிப்படுத்த முடிவு செய்தது.

அதைச் செயலில் வெளிப்படுத்த முடிவு செய்தது. அம்முரண்-பாட்டிலிருந்து முழுஎண்ணத்தைக் கண்டுபிடிக்கிறது. வாழ்வின் பொருளில் அதையே எதிர்த்திசையில் காண்கிறது. சத்திய ஜீவியம் பின்னால் செயல்படுவதால் மனம் இப்படிச் செயல்பட முடிகிறது. பல்வேறு உறவுகளின் சத்தியம் தாழ்ந்த சத்தியம். இது தவிர்க்க முடியாதது. தர்க்கத்தாலும், அதன் எதிரான முறையாலும் மனம் இதைச் சாதிக்கிறது. இதுவே சட்டத்தின் இயல்பு அல்லது உலகில் உலவும் சத்தியம். இது நியாயமான நிலைமை. ஜீவனில் புதைந்துள்ளதை இச்செயல் வெளிக் கொணரும். அதன் மூலத்தில் உள்ள சாரம் இதைத் தாங்கி வருகிறது. இதுவே அதன் இயல்பு, சுபாவம். சுயமான சட்டம், சுயமான ஜீவனில் இவை புதைந்துள்ளன. சுபாவம், சுதர்மம், தெய்வீகஞானம் இதைக் காணும். உபநிஷத சுலோகங்களில் இது உண்டு. சில சொற்களில் இச்சூத்திரம் உலகையடக்கும். சத்புருஷன் ரிஷி, முனிவராகும். எங்கும் நாம் காண்பது அவனே. யுகாந்தகாலமாக தன்னுள் அனைத்தையும் சரியாகச் செயல்படும்படி ஏற்பாடு செய்துள்ளது. அவற்றின் உள்ளுறை சத்தியத்திற்கேற்ப இதைச் சத்புருஷன் செய்கிறது.

**175/4:** மனம், உயிர், உடலெனும் திரிலோகம் நம் உலகம். இது பரிணாமம் சாதித்த திரிலோகம். மேற்சொன்னதின் முடிவு இது. வாழ்வு ஜடத்துள் மறைந்துள்ளது. மறைந்து அதன் அமைப்புடன் கலந்து கரைந்துள்ளது. அது சிந்தனையாக வெளிவருகிறது. மனம் உயிரில் விழித்த வாழ்வது. மனம் உள்ள இடத்தில் சத்தியஜீவியம் உண்டு. அதுவே உயிருக்கும், ஜடத்திற்கும் உண்மை. இம்மூன்றின் ஆதி சத்தியஜீவியம். சத்தியஜீவியம் அவற்றை ஆட்சி செய்கிறது. அதனால் மனம் பரிணாமத்தால் வெளிவரும் பொழுது சத்திய ஜீவியமும் வெளிவரும். உலகின் அடிப்படையில் நாம் தேடுவது புத்தி. நாமறிந்தவற்றில் உயர்ந்தது புத்தி. புத்தி ஆட்சி செய்வதாக நாம் நினைக்கிறோம். நம் செயல்களையும் சிருஷ்டியையும் புத்தி நமக்கு எடுத்துரைக்கிறது. பிரபஞ்சத்தில் ஜீவியம்என்று ஒன்றிருந்தால், அது புத்தியென நினைக்கிறோம். புத்தி மனத்தின் ஜீவியம். புத்தி அறியும், சிந்திக்கும், பயன்படுத்தும். சத்தியத்தின் ஜீவனாக இருக்க



முடியுமளவுக்கு புத்தி செயல்படுகிறது. தன்னைவிட உயர்ந்தது. அதன் பின்னால் ஒரு சக்தியுண்டு. அது ஜீவியத்தின் மற்றோர் உயர்ந்த சக்தியாகும். அது சத்தியத்திற்குரியது. அதனால் நாம் இன்று ஏற்றுக் கொண்ட கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். ஆழ் மனத்தையோ, புத்தியையோ நாம் முடிவாகக் கருதக் கூடாது. அவற்றுள் மறைந்து, கலந்து, கரைந்துள்ள சத்தியஜீவியமே முடிவு. அது மனத்தை முன்வைக்கிறது. உடனே நாம் நேரடியாகச் சந்திக்கும் ஞான-உறுதி அது. அதன் சக்தி ஆழ்மனத்திற்குரியது. அது ஜட சக்தியையும், ஜடத்தின் உறுதியையும் பயன்படுத்தும். ஜீவனின் பொருளில் அது ஆழ்மனமாகும். அது பிரகிருதி. புருஷனின் செயலாற்றும் சக்தி. அது இந்த ஜடவுலகைச் சிருஷ்டித்தது.

**175/5:** நாம் வாழ்வுஎன இங்குக் கூறுவது உண்மையில் மனம். சக்தி குறிப்பாக சிறப்பாக வெளிப்படுவது மனம். வாழ்வுஎனில் என்ன? அதற்கும் சத்தியஜீவியத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? சத்தியஜீவியம்என்பது சச்சிதானந்தத்தின் உயர்ந்த உன்னதமான திருமூர்த்திகளின் அம்சம். முழு எண்ணத்தாலும், சத்தியம்-ஜீவியத்தாலும் சிருஷ்டியை சுறுசுறுப்பாக அது தொடர்கிறது. இம்முன்றில் எந்த அம்சத்திலிருந்து வாழ்வு எழுகிறது? வாழ்வு பிறக்கும் அவசியம் என்ன? வாழ்வு தெய்வீகமானதா? எதிரானதா? இது சத்தியமா? மாயையா? காயமே இது பொய்யடா, சேலை கட்டிய மாதரை நம்பாதேஎன நாம் தொன்றுதொட்டு கேட்கிறோம். வாழ்வு மாயை, அது ஜன்னி, பைத்தியம் என்கின்றனர். நாம் வாழ்வை விட்டகன்று, பிரம்மத்தில் சாந்திபெற வேண்டும்என்றனர். இது உண்மையானால், ஏன் இது உண்மை? ஏன் பிரம்மம் இந்த பாவத்தை மேற்கொண்டு மனித குலத்தை அதற்கு உட்படுத்தியது? பிரம்மம் தன்னையே தான் தண்டித்துக் கொண்டதாகாதா? அவனுடைய சிருஷ்டிக்கு அவன் செய்யும் பாதகமில்லையா இது? உலகையே ஆட்டிவைக்கும் மாயையின் செயலா இது? அல்லது இதில் தெய்வ தத்துவம் உண்டா? அல்லது இப்படி வாழ்வாக வெளிப்படுவது எது? பிரம்மம்என்று ஒன்றுண்டா? அவனுக்கு இப்படியெல்லாம் செயல்பட முடியுமா? அது உண்மையானால், அவன் காலம், இடமாக வெளிப்பட

வேண்டும். கோடிக்கணக்கான ரூபங்கள் வெடித்தெழுவது இவ்வுலகம். பிரபஞ்சத்தின் ஏராளமான உலகங்களை அவை நிரப்புகின்றன.

**176/6:** வாழ்வு உலகில் செயல்படுவதை நாம் ஆராயலாம். அதன் அடிப்படை ஜடம். பிரபஞ்ச சக்தியின் ஒரு முக்கிய ரூபம் வாழ்வு என நாம் காண்கிறோம். இது தீவிரமான ஆற்றோட்டம். அதன் ஓர் ஓடை எனவும் கூறலாம். இது நல்லதாகவோ, கெட்டதாகவோ இருக்கலாம். இது தொடர்ந்த செயல், சக்தியின் லீலை. இது ரூபகர்த்தா. ரூபங்களைத் தொடர்ந்து தூண்டுவதால் அவற்றிற்குத் தொடர்ந்த சக்தியை இது அளிக்கிறது. இவ்வாழ்வை அழிவுமூலம் நிலைநிறுத்துகிறது. அவ்வழிவு இடைவிடாமல் செயல்படுவது. உடலின் பொருளைப் புதுப்பிப்பதுமூலம் வாழ்வு நீடிக்கிறது. நாம் வாழ்வையும், மரணத்தையும் எதிரானவையாகக் காண்கிறோம். இது நமக்கு இயல்பு. இது நம் மனப்பான்மையின் தவறுஎன்பதை விளக்கும். இது பொய்யான எதிர்ப்புகளில் ஒன்று. (அகத்தின் உண்மையில் இது பொய். இது மேலெழுந்த நடைமுறை அனுபவத்திற்கு உண்மை.) தோற்றம் ஏமாற்றுகிறது. பிரபஞ்ச ஐக்கியம் தொடர்ந்து வெளிப்படும். மரணம் உண்மையில்லை. அது வாழ்வின் வளரும் வண்ணம். மரணம் என்பது வாழ்வு விரைவாக அழிவது. ரூபம் பெற்ற அனுபவம் மாறுவது அவசியம். அந்த அவசியத்திற்கு மரணம் உட்பட்டது. உடல் மரணமடைகிறது. அங்கும் வாழ்வு நிற்பதில்லை. ஒரு ரூபத்தின் பொருள் சிதைகிறது. அடுத்த ரூபத்திற்கு அது பொருளாகிறது. இயற்கையின் சட்டங்கள் எங்கும் ஒன்றுபோன்றவை. உடலில், அது பெற்ற ரூபத்தில், மனோ சக்தியின் வடிவம் ஒன்றுள்ளது. அது சைத்தியபுருஷனின் சக்தி. அதையும் இயற்கை அழியவிடுவதில்லை. ஒரு ரூபத்தினின்று அது அடுத்த ரூபம் பெறுகிறது. மாறும் மனோதத்துவத்தால் அது நிகழ்கிறது. உடலுக்கு புத்துயிராக ஆத்மாவைத் தருவது அது. எல்லாம் தன்னைப் புதுப்பிக்கின்றது, எதுவும் அழிவதில்லை.

**176/7:** உலகத்தை ஊடுருவும் வாழ்வுள்ளதுஎனக் கூறலாம். அது தீவிரச் செயலாற்றும் சக்தியாகும். (இது ஜட அம்சம். இது அதன் புறச்சலனம்.) அது இந்த ஜடப் பிரபஞ்சத்தின் அத்தனை



ரூபங்களையும் சிருஷ்டிக்கிறது. இது அழியாத வாழ்வு, அமரவாழ்வு. பிரபஞ்சமே அழிந்தாலும், இது அழியாது. அதனிடத்தில் புதிய பிரபஞ்சத்தை உற்பத்தி செய்யவல்லது. அதை இழுத்துப் பிடித்து நிறுத்தினாலன்றி, அது சிருஷ்டித்தபடியிருக்கும். சலனமற்ற சக்தி, இதைவிடப் பெரிய சக்தியால் மட்டும் அதை இழுத்துப் பிடிக்க முடியும். அப்படியானால் உலகில் ரூபங்களை உற்பத்தி செய்யும் சக்தி வாழ்வு. வாழ்வு இந்த ரூபங்களை ஆதரிக்கவும் செய்யும். அழிக்கவும் செய்யும். பூமியாக வெளிப்படும் வாழ்வது. இது தாவரத்திலும், விலங்கிலும் ஒரே சக்தியாக உள்ளது. விலங்கு, தாவரம் வாழ உதவுகிறது. விலங்கு தாவரத்திலுள்ள சக்தியைச் சாப்பிடுகிறது. தாவரம் விலங்கிலுள்ள சக்தியால் ஆதரிக்கப்படுகிறது. வாழ்வு என்பதெல்லாம் பிரபஞ்சவாழ்வு. வாழ்வு ஜடமாக உருவாகிறது. வாழ்வின் வளரும் வண்ணம் ஜடத்தின் வாழ்வில் மறைந்துளது. மனத்திற்குட்பட்ட உணர்ச்சியாகவும், மனமான உயிராகவும் அது வெளிவருகிறது. இருப்பினும் வாழ்வு அதே சிருஷ்டிக்கும் சட்டமாகும்.

**177/8:** நாம் வாழ்வெனக் கூறுவது இது இல்லை. நாமறிந்த பிரபஞ்ச வாழ்வின் குறிப்பிட்ட ஒரு சக்தியை நாம் வாழ்வென்கிறோம். அது விலங்கிலும், தாவரத்திலும் மட்டும் வெளிப்படுகிறது. கல், வாயு, உலோகத்தில் அது இல்லை. அது விலங்கின் செல்லில் செயல்படுகிறது. ஆனால் ஜடத்தின் செல்லில்லை. எனவே வாழ்வில் இச்சக்தி செயல்படுவதற்கு ஜீவனற்றவற்றுள் செயல்படுவதற்கும் உள்ள வித்தியாசத்தை நாமறிய வேண்டும். அப்பொழுது நாம் செய்வது நமக்குத் தெளிவு தரும். இந்த வித்தியாசம் குறிப்பாக எப்படி வெளிப்படுகிறதுஎன்பதே கேள்வி. உயிரற்ற பொருள்களை நாம் ஜீவனற்றவைஎனலாம். இவ்விரண்டிலும் இச்சக்தி செயல்படுவதில் வித்தியாசமுண்டு. நாம் அதைக் கண்டுபிடிக்க வேண்டும். புவியில் அப்படிப்பட்ட லோகங்கள் மூன்று. விலங்கினம், தாவரம், ஜடம் ஆகியவை அவை. இது பழைய பாகுபாடு. நாம் விலங்கினத்தைச் சேர்ந்தவர்கள். நமக்கு உயிர் உண்டு. தாவரத்திற்கு உயிர் உண்டு. அவற்றிற்குள்ள வித்தியாசம் என்ன? மேற்கொண்டு என்ன வித்தியாசமுள்ளது? அது வாழ்வுக்கும் ஜீவனற்றதற்கும் உள்ள

வித்தியாசம். பழைய மொழியில் அதை உலோகம், கனிப்பொருள் என்கிறோம். விஞ்ஞானம் ரஸாயன உலகைக் கண்டுள்ளது.

**177/9:** வாழ்வுஎனில் நமக்கு விலங்கின்வாழ்வு வாழ்வாகும். நாம் குறிப்பிடுவது இதுவே. வாழ்வு மூச்சு விடும், சாப்பிடும், அசையும், ஆசைப்படும். தாவரத்தில் உயிர் உள்ளதுஎன்கிறோம். இது ஓர் உருவகம். இதற்கு உண்மையில்லை. தாவரத்தில் உயிர் உண்டு. இது ஜடம்என நாம் கருதுகிறோம். இதை தாவரத்தைப்போலவோ, விலங்கைப்போலவோ நாம் கருதுவதில்லை. உயிர்எனில் மூச்சுவிட வேண்டும். நாம் அதை வாழ்வின் மூச்சுஎன்கிறோம். எல்லா மொழிகளிலும் உள்ள நயம் இச்சொல். நம் கருத்தை மாற்றினாலும் சூத்திரம் உண்மை. அதையே வாழ்வின் மூச்சு என்கிறோம். இயல்பாகச் சாப்பிடுகிறோம், நடக்கிறோம், மூச்சு விடுகிறோம். இவை வாழ்வு எழும் வண்ணங்கள், வாழ்வன்று. பட்டம் படிப்புக்கு அடையாளம், படிப்பன்று. இவை சக்தியைத் தூண்டும் முறைகள். இவை தொடர்ந்த இடைவிடாத செயல்கள். இது நம் உயிர். அழிவதும், அழிந்து புதுப்பிப்பதும் உண்டு. இவை நாம் உடலில் வாழ்வதற்கு உறுதுணை. அவை நம் உயிர் வாழும் வகை, உயிர் வளரும் பாணி. இவற்றை வேறு வகைகளால் நடத்திக் கொள்ளலாம். மூச்சு விடுவது மட்டும் உயிரின் வளர்ச்சியன்று. அதுவே நமக்கு, நம் உடலுக்கு உணவளிக்கவில்லை. மூச்சு விடுவதும், இதயத் துடிப்பும் உயிர்வாழ இன்றியமையாதவையெனக் கருதப்படுகின்றன. மற்ற நிபந்தனைகளும் உண்டு. அவற்றைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம். இருந்தாலும் உடலில் உயிரிருக்கும். முழுமையாக அது ஜீவியமாகும். இதை நிரூபித்துள்ளனர். இதற்குப் புதிய சாட்சியங்கள் எழுகின்றன. தாவரம் மனத்தால் அறிந்து செயல்படவல்லதன்றென என நாம் நினைக்கிறோம். அதன் வாழ்வு ஜடவாழ்வு. அதன் வாழ்வும், நம் வாழ்வும் ஒன்றே, எந்த மாறுபாடுமில்லை. எல்லா வகைகளிலும் இரண்டும் ஒன்றாகும். நம் வாழ்வு அமைந்தது போலவே தாவரத்திற்கும் அமைந்துள்ளது. தோற்றத்தில் அமைப்பு வேறாகத் தோன்றுகிறது. இதையும் நிரூபித்ததாகக் கொள்வோம். அது உண்மையானால், நாம் நினைப்பனவெல்லாம் அடிப்படையில் மாறும்.



பழைய நினைவுகள் அர்த்தமற்றவை, பொய்யானவை. அடையாளத்தைக் கடந்து அறிவைச் செலுத்தவேண்டும். அடையாளம் புறம். நாம் பிரச்சினையின் ஆணி வேரைக் காண வேண்டும்.

**178/10:** சமீபத்தில் செய்த சோதனைகளின் பலன் வந்துள்ளன. இதை நாம் ஏற்கலாம். ஜடத்தில் உயிரிருக்கிறதாஎன்பதைப் பிரதானமாக விளக்கும் சோதனைகள் இவை. ஒரு பெரிய இந்திய விஞ்ஞானி, தாவரத்திற்கு உயிருண்டு என்கிறார். அவற்றால் உணர்ச்சிக்குப் பதிலளிக்க முடியும்என்கிறார். உயிரிருப்பதைத் தடையின்றி அறிவிக்கும் நிரூபணம் அது. குறிப்பாக இது தாவர வாழ்வின் தனி அம்சம். அவர் கண்ட சோதனைப் பலன்கள் இதை விளக்குகின்றன. அதன் எல்லா சூட்சுமச் செயல்களிலும் உயிருண்டு என்ற அறிகுறியுண்டு. இது மறுக்க முடியாத அடிப்படை உண்மையென்பதை நாம் மறக்கக் கூடாது. உயிரிருப்பதற்கு இது நிரூபணம். உணர்ச்சியை ஏற்றுச் செயல்படுவது நிரூபணம். உயிருள்ளதுஎன்பதை இரு வகைகளாகவும் இது நிரூபிக்கிறது. மரணம் எதிரான அறிகுறி. இரண்டையும் இவ்விஞ்ஞானி நிரூபித்துள்ளார். இதை உலோகத்திலும், தாவரத்திலும் அவர் நிலைநிறுத்தினார். இவை இயற்கையின் இயல்பான கருவிகள். இவை நுட்பமான கருவிகள். அவற்றைக் கண்டுபிடிக்கலாம். தாவரமும், உலோகமும் ஒன்றாகச் செயல்படும் இடங்கள் பல. அவற்றையும் இக்கருவிகள் காட்ட முடியும். பெரும் அளவில் நிரூபணம் கிடைக்காமலிருக்கலாம். வாழ்வின் ஸ்தாபன அமைப்பை அதனால் விளக்க முடியாமற்போகலாம். அவையிரண்டும் ஒன்றென நம்மால் காணமுடியும். அப்படியில்லாமலிருக்கலாம். ஒரே அமைப்பு இரண்டிலும் இல்லைஎன அது காட்டலாம். அல்லது எந்த அமைப்புமேயில்லையென அது காட்டலாம். இருந்தாலும் உயிரின் ஆரம்பம் தெரியும். உலோகத்திற்கு உயிருண்டு. அது ஆரம்பக் கட்டத்திற்குரியதாக அமையலாம். இப்பொழுது இதை நாம் ஏற்க வேண்டும். அது மறைந்திருக்கலாம், ஆரம்ப நிலைக்குரியதாக இருக்கலாம். வாழ்வு புவியில் அதன் அடிப்படை அமைப்பாக இருக்கலாம். அல்லது மற்ற ஜட வாழ்வுக்குள்ளிருக்கலாம். அது உலோகம்போல் அமையலாம்.

நம் ஆராய்ச்சியைத் தொடர்வோம். முடிவுக்குமுன் முடிக்க வேண்டிய அவசியமில்லை. ஆரம்பச் சோதனைகள் தவறினால் நாம் ஆராய்ச்சியை நிறுத்துவோம். இயற்கை மாறாத அனுபவம் தருகிறது. ஆராய்ச்சியைத் தொடர்ந்தால் தாவரத்திற்கும் உலோகத்திற்கு-மிடையே இடைவெளியில்லையென நிரூபணமாகும். மண்ணுக்கும், உலோகத்திற்கும் இடையே தெளிவான பிரிக்கும் எல்லையென எதுவுமில்லை. அதேயெல்லை தாவரத்திற்கும் உலோகத்திற்கு-மிடையேயுண்டாவென தொடர்ந்து ஆராயலாம். அணுவுக்கும், அடிப்படைக்கும் இடையே எந்த எல்லையுமில்லை. அவை மண்ணையும், உலோகத்தையும் நிரப்புகின்றன. உலோகமும், மண்ணும் அவற்றை நிரப்புகின்றன. இது படிப்படியான அமைப்பு. ஒவ்வொரு படியும் அடுத்ததைத் தயார் செய்கிறது. அடுத்தாற்போல் வரவேண்டியது முந்தையதினுள் உண்டு. வாழ்வு சர்வத்திலும் வியாபித்துள்ளது. அது இரகஸ்யமாகவோ, வெளிப்படையாகவோ இருக்கிறது. மறைந்திருக்-கலாம், பரிமளிக்கலாம். வித்தாகவோ, முறைப்படுத்தப்பட்டோ பிரபஞ்சம் எங்கும் ஊடுருவி, அழியாமல் அமைந்துள்ளது. ரூபமும் அமைப்பும் மாறுகின்றன.

**179/11:** தொடுஉணர்ச்சிக்குப் பதிலுண்டுஎன விஞ்ஞானம் நிரூபிக்கிறது. இது புறத் தோற்றம். மூச்சு, நடை போன்றவை அவை. சோதனை செய்தவர் ஒரு சிறந்த உணர்ச்சியை உற்பத்தி செய்தார். அதற்குத் தெளிவான பதில் கிடைத்தது. அது அப்பொருளுக்கு உயிரிருக்கிறதுஎனக் காட்டுகிறது. அவை உயிரிருப்பதன் அடையாளம். தாவரம் அளவுகடந்த தூண்டுதலுள்ள சூழலில் உள்ளது. அவை தொகுப்பாக உள்ளன. செடி தொடர்ந்து அவற்றுடன் செயல்படுகிறது. சூழலில் தொடர்ந்து சக்தி செயல்படுகிறது. தாவரத்தின் உயிர் அதை ஏற்றுப் பதிலளிக்கவல்லது. சக்தி சூழலிலின்று எழுகிறது. பதில் சக்தியின் வெளிப்பாடு. இந்தச் சோதனைகள் தவறு என்கின்றனர். சோதனை தாவரத்தின் உயிரைப் பாதிக்கும்எனக் கூறுகின்றனர். உணர்ச்சி, தொடு உணர்ச்சி - என்பது வேகம் நிறைந்த சக்தி. இதைச் செடிக்கு அளிக்கிறோம். தீவிரமான செயலின் வெளிப்பாடு இது. இது உணர்ச்சி நிறைந்த



செயல்பாடு. அவ்வதிர்ச்சிக்குத் தாவரம் பதிலிறுக்கும். உணர்ச்சியை மலர்ந்து ஏற்றுப் பதில் கூறும். வளரும்முனைப்பு, வாழும் துடிப்பாக இருக்கிறது. இது மனத்திற்குக் கீழ்ப்பட்ட செயல். உயிர்-உடலுக்குரிய அமைப்பிது. ஜீவனின் ரூபத்தில் மறைந்துள்ள சித்-சக்தியாகும் இது. பிரபஞ்சத்தில் தொடர்ந்த தீவிரமான சக்தி செயல்படும். ஜட உலகில் இது பல ரூபங்களை ஏற்கிறது. இது சூட்சுமமாகவும், ஜடமாகவு-மிருக்கும். எல்லா ஜடப்பொருள்களிலும் இது உண்டு, எல்லாப் பொருள்களிலும் உண்டு. உலோகம், தாவரம், விலங்கில் இது உண்டு. இவை ஒரே சக்தி. தீவிரமானது. இது சேமிக்கப்பட்டு, சுறுசுறுப்பாகச் செயல்படும். இதுவே உண்மை. இவையிடையே ஒரு பரிமாறுதல் உண்டு. அதுவே தோற்றம். அத்தோற்றம் வாழ்வு. நாம் அதை வாழ்வென அறிகிறோம். இது வாழ்வின் சக்தியின் செயல். அதை நாம் அப்படி அறிகிறோம். இது வாழ்வின் சக்தியால் தீவிரமாகத் துரிதப்படுத்தப்படுகிறது. லோக சக்திக்கு மூன்று தோற்றமுண்டு. அவை மனோசக்தி, வாழ்வின்சக்தி, ஜடசக்தி.

**180/12:** ரூபம் அழியலாம், சக்தி அழியாது. சக்தி வித்தாக இருக்கிறது. உயிருள்ள அதன் செயல்கள் - வழக்கமாக நடப்பவை - நிறுத்தப்பட்டுள்ளன. அவை முடியும் தருவாயிலிருக்கலாம். இறந்தவரை உயிர்ப்பிக்கலாம். அது ஒரு வரையறைக்குள் முடியும். வழக்கமான செயல்களைப் புதுப்பிக்கலாம். சுறுசுறுப்பான சக்தி தொடர்ந்து உடலெங்கும் செயல்படுவதை மீண்டும் பெறலாம். நாம் உயிர் - வாழ்வு - எனக் கூறுவது இனியும் உடலில் உள்ளதுஎன அறியலாம். அது பழக்கத்தில் வித்தாக இருந்திருக்கிறது, செயலில் வெளிப்படவில்லை. அவை அவற்றின் வழக்கமான உடலின் செயற்கூறுகள். அது உணர்ச்சியின் லீலை, பதில். விழிப்பான அறிவு விலங்கில் பதிலிறுக்கும் பழக்கம் அவை. வாழ்வு என்று தனிச் சிறப்புள்ள ஒன்றிருப்பதாகக் கூறுவது சிரமம். அது உடலைவிட்டு முழுமையாக வெளியேறிவிட்டது. அது விரும்பும்பொழுது மீண்டும் உடலுக்குள் வரும். புறரூபத்தைத் தூண்டினால் அது ஏற்படும். (உடலோடு தொடர்பு ஏற்படுத்த எதுவுமில்லாததால், அதை எப்படிச் சாதிப்பதுஎன்பது கேள்வி.) வலிப்பு உதாரணம். இங்கு புறத்

தோற்றமான அடையாளம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. வாழ்வின் செயல் நிறுத்தப்பட்டது. ஆனால் மனப்பான்மை இருக்கிறது. அது விழிப்பானது, தன்னையறியும். வழக்கமாக உடல் செயல்படுவதைச் செய்யும்படி நிர்ப்பந்திக்க முடியாது. உடல் மரணமடைந்து, மனம் உயிரோடுள்ளதுஎனக் கூறமுடியாது. உடலிலிருந்து உயிர் வெளியே போய்விட்டது. ஆனால், மனம் உயிரோடு உடலிலுள்ளதுஎனக் கூற முடியாது. வழக்கமான உடலின் செயல்கள் நிறுத்தப்பட்டன. மனம் இன்னும் சுறுசுறுப்பாக இருக்கிறது.

**180/13:** சமாதியில் சில வகைகளுண்டு. இங்கு உடலின் செயல்களும், வெளிப்படும் மனமும் நிறுத்தப்படும். அவை பிறகு செயல்பட ஆரம்பிக்கும். புறத்தூண்டுதல்மூலம் சில சமயங்களில் அது நடக்கும். உள்ளிருந்து எழும் அசைவால் இயல்பாக மீண்டும் செயல்படலாம். மேல் மனத்தின் சக்தி இப்பொழுது ஆழ்மனத்துள் அடங்குகிறது. மேலுள்ள பிராணசக்தி வாழ்வுக்குக் கீழேபோய் அடங்குகிறது. இவ்வழி முழுமனிதனும் ஆழ்மன வாழ்வுக்குள் சென்று அடங்கும். அல்லது அவனது வாழ்வு மேலிருந்து ஆழ்மனத்துள் சென்று மறைகிறது. அதே சமயம் அவனது உள்மனம் பரமாத்மாவை அதே போல் நாடுகிறது. இதுவே முக்கிய கட்டம். அதாவது சக்தி தன் புறச் செயல்களை நிறுத்திக் கொள்கிறது. இச்சக்தியே உடலின் தீவிர சக்தியைக் காப்பாற்றுகிறது. இருந்தாலும், ஸ்தாபனப் பொருளுக்கு இச்சக்தி உறுதுணையாகும். ஒரு கட்டத்தைக் கடந்தால், பிரிந்த உயிரை மீட்க முடியாது. உறுப்பின் சிதைவு தடையாகலாம். இப்பாதகம் உடலை பயனற்றதாக்கும். அல்லது உடல் பழக்கமான செயல்களை மீண்டும் ஏற்க முடிவதில்லை. இது வேறு வகையாகவும் நடக்கலாம். உயிரின் செயலைப் புதுப்பிப்பது சக்தியே. சூழலின் சக்தியை அறிய முடியாதபடி சொரணையை இழக்க நேரிடும். அது உணர்ச்சியைத் தூண்டும் பெருந்தொகுப்பு, பொதுவாக சக்தி சூழலுடன் தொடர்ந்து பரிமாறும். இப்பொழுது அது முடிவதில்லை. அப்படியும் உடலில் உயிரிருக்கும். அவ்வுயிர் உடலின் அழிவுக்குமட்டும் பயன்படும். ரூபம் பெற்ற பொருளை அது அழிக்கும். இதன் வழி மனிதன் பஞ்ச பூதங்களிலிருந்து தப்புகிறான். புதியதாக அது



பிறக்கிறது. பிரபஞ்சசக்தியில் உறுதியுண்டு. அது ரூபத்தைக் கட்டிப் பிடிக்கிறது. இப்பொழுது அப்பிடியைத் தளர்த்துகிறது. மாறாக இதே சக்தி எதிரான செயலான அழிவை ஆதரிக்கிறது. அதுவரை மரணம் உறுதிப்படாது.

**181/14:** பிரபஞ்சத்திலொரு சக்தியுண்டு. அதன் லீலை தீவிரமானது. அந்த லீலைக்கு வாழ்வுஎனப் பெயர். வாழ்வில் உள்ள ஜீவியம் மனத்தின் ஜீவியம். அதில் பிராணனுக்குரிய உயிரும் உண்டு. ஏதோ ஒரு ரூபத்தில் அவை வாழ்விலும் உண்டு. சாஸ்திரத்திற்காகவாவது அது உண்டு. அவை வாழ்வு பிறக்கும்பொழுதே ஏற்பட்டவை. எனவே அவை நம் உலகில் உதிக்கின்றன. ஜடம்என்ற ரூபத்தை அவை ஸ்தாபனமாக ஏற்கின்றன. இந்தசக்திக்கு வாழ்வின் லீலையுண்டு. அதன் வெளிப்பாடு ஒரு பரிமாறுதலாக அமையும். தூண்டுதல், பதிலாக முடிவது அப்பரிமாறுதல். பல்வேறு ரூபங்களின் உறவால் ஏற்படும் தூண்டுதல் அவை. அவற்றால் கட்டப்பட்ட கட்டடம் அது. அதன் இடைவிடாத தீவிர உணர்ச்சியலைகள் அவற்றை நடத்துகின்றன. ஒவ்வொரு ரூபமும் கொடுத்துப்பெறுகின்றன. இது இடைவிடாது நடைபெறுகிறது. இது தீவிரமான அலைபாயும் சலனம். பொதுசக்தியுடனும், மூச்சுடனும் அது அப்படிச் செயல்படுகிறது. ஒவ்வொரு ரூபமும் அதன்மூலம் வாழ்கிறது. பலவகைகளாக அவை தம் உணவுச்சத்தைப் பெறுகின்றன. அது நேரடியாகவோ, மறைமுகமாகவோ நடைபெறுகிறது. வேறு ரூபங்களை ஏற்பதாலும் இது நடைபெறும். அந்த ரூபங்களுள் சக்தி குவிந்து உறைகிறது. தீவிர சக்தி வெளிப்படுவதால் அதை கிரகிப்பதன் மூலம் இது நடக்கிறது. வெளியிலிருந்து வெளிப்படும் சக்தியை அது பெறுகிறது. இவை வாழ்வின் லீலை. பல இடங்களில் இவ்வமைப்பு, போதும். நமக்கு அது எளிதில் புரியும். புறச்சலனங்களை நாம் காணலாம். அவற்றின் ராசி சிக்கலான சிறப்பு. பிராணசக்தியின் உயிருக்குரிய உருவமிது. அது நம் ஸ்தாபன அமைப்பைப் போன்றது. தாவரத்தில் உயிரிருப்பதன் தெளிவான தோற்றமுண்டு. அதனால் தாவரத்திற்கு உயிருண்டுஎன நம்மால் ஏற்க முடிகிறது. தாவரத்திற்கு நரம்பு மண்டலம் உண்டெனக் காட்ட முடியும். அது நமது நரம்பு

மண்டலத்தினின்று வேறுபட்டதில்லை. நரம்புக்குரிய அறிகுறிகள் அதற்குண்டு. அது நாம் தாவரத்தின் உயிரை ஏற்பதை எளிதாக்குகிறது. (மண்ணிலும், உலோகத்திலும் அதை நாம் ஏற்க மறுக்கிறோம். ரஸாயன அணுவில் அது உள்ளது. நமக்குப் புலப்படுவதில்லை. இங்கு அது தெளிவாகத் தெரிவதில்லை. சிரமப்பட்டால் அதைக் காண முடியும்.)

**182/15:** இது மாறுபாடு, வேறுபாடில்லை. இதை நம் கருத்தால் வேறுபாடாக்கலாம். அது சரியா? நமக்கு உயிருண்டு. தாவரத்திற்கு உயிருண்டு. இவையிரண்டிற்கும் என்ன வித்தியாசம்? அவை வேறுபடுவதை நாம் காண்கிறோம். நாம் நடக்கிறோம். நடப்பதற்கும் உயிரிருப்பதற்கும் தொடர்பில்லை. நமக்கு நாம் அறியும் உணர்ச்சியுண்டு. அது தாவரத்தில் உற்பத்தியாகவில்லை. நம் நரம்பு மண்டலம் பதிலிறுக்கிறது. நாம் அறியும் உணர்ச்சி அதன் மூலம் வெளிப்படும். பெரும்பாலும் இது உண்மை. எப்பொழுதும் அப்படியிருப்பதில்லை. அவை மனத்தின் பண்பு. நரம்பு மண்டலப் பண்பாகவும் அது உண்டு. நரம்பின் செயலால் உடல் பதைக்கும். தாவரத்தில் நரம்பு மண்டலம் உணர்ச்சியிருப்பதுபோல் தோன்றும். நமக்கு இன்பதுன்பமுண்டு. நாம் விழித்திருக்கிறோம், தூங்குகிறோம். களைப்பு, மந்தம், ஆர்வம் நமக்குண்டு. இவை நரம்புணர்ச்சியின் அடையாளங்கள். செயல்படும்பொழுது உடல் உள்ளூற நரம்பு மண்டலத்தால் படபடக்கும். மனம் அறியும் உணர்ச்சி வேறு. அதை நாம் தாவரத்தில் காண்பதில்லை. அது இருப்பதின் தெளிவான அறிகுறி எதுவுமில்லை. உணர்ச்சி ஜீவியத்தின் ஓர் உருவம். அது மனம் அல்லது உயிராக இருக்கும். உணர்ச்சி என்பது உணர்ச்சியே. உணர்ச்சியுள்ள தாவரம் சுருங்கும். தொடுஉணர்ச்சியை அது சுருங்கி விலக்குகிறது. அதன் நரம்புமண்டலம் பாதிக்கப்படுகிறது. ஏதோ ஒன்று அதனுள் தொடுவதை விரும்பவில்லை. தொடும் பொருளிலிருந்து அது விலகுகிறது. சுருங்கச் சொன்னால் அது ஆழ்மன உணர்ச்சி. அது தாவரத்திற்குரியது. நம்மில் அவை ஆழ்மனச் செயல்களாகும். இரண்டும் ஒன்றே. இவை ஆழ்மன உணர்ச்சி, ஆழ்மனம் அறிவால் உணர்வதாகும். இதை மேல் மனத்திற்குக் கொண்டு வரலாம். மனித உடலுக்கு இது முடியும். செயல் முடிந்து நாளானபின்னும் இதைச் செய்யலாம். நரம்பு மண்டலத்தை அது பாதிக்காத நிலை வரலாம். ஆழ்மனம் நம்முள் பரந்தது. நாம் அறிவால் விழிப்புடன் காணும் மனத்தைவிடப் பெரியது. இதன் உண்மையை எடுத்துக் கூறும் நிகழ்ச்சிகள் ஏராளம். அவை மறுக்க முடியாதவை. இதை இன்று உலகம் ஏற்கிறது. இந்நிலை வளர்ந்து பெருகுகிறது. தாவரத்தின் மேலெழுந்த செயல்களில் மனம் உஷாராக இல்லையென்பது தெளிவு. அதன் ஆழ்மனச் செயலின் உணர்வு பயன்படுவதை மனம் விழித்து அறியும். அவற்றுள் வித்தியாசமில்லை. இது என்ன நிகழ்ச்சியென நாம் அறிய விரும்புகிறோம். அதற்கு இது தேவையில்லை. அது வாழ்வின் எளிமையான செயல். இது ஆழ்மனப் புலனுணர்வு. அது உலோகத்தில் காணப்படுகிறது. அது இருப்பதன் வாய்ப்பு பெரியது. உலோகத்தின் உடல் உணர்வால் பாதிக்கப்படுவதில்லை. அது நரம்புமண்டலம் போன்றது. உடல் அசைவில்லைஎன்பது உண்மை. இவற்றுள் முக்கியமான வேற்றுமையில்லை. உயிரிருப்பதற்கு இது அவசியமில்லை. நடமாடும் திறன் தாவரத்திலில்லை. அதனால் தாவரத்திற்கு உயிரில்லைஎனப் பொருளாகாது. உலோகம் செயல்படும் விதம் இது போன்றது.

**183/16:** மனம் ஆழ்மனமாகிறது. ஆழ்மனம் மனமாக மாறுகிறது. இந்த மாறுதல்களில் என்ன நடக்கிறது? ஓர் உண்மையான மாற்றம் உண்டு. விழிப்பான மனோசக்தியை கிரகிப்பது அம்மாறுதல். செயலில் ஒரு பகுதி அதைச் செய்கிறது. தனிப்பட்ட குறிப்பான நிஷ்டை அது. நிஷ்டைக்குப் பல ரூபங்களுண்டு. நாம் அதை மனப்பான்மையென்-கிறோம். இங்கு பிரக்ஞை விழிப்பாக செயல்படுவதில்லை. பிரக்ஞை என்பது அகம் புறமாவது. இருப்பினும் உடலின் செயல்கள் இயல்பாக நடக்கின்றன. நரம்பு மண்டலமும், புலன்களும் அதே போல் இயங்குகின்றன. அவை இடைவிடாமல் சிறப்பாகச் செயல்படுகின்றன. இவ்வழி மனம் ஆழ் மனமாகிறது. ஒரு செயலில் மனம் ஒளிமயமாகச் செயல்படுகிறது. அது தொடர்ந்த செயலாகவுமிருக்கும். பகவான் ஸ்ரீ அரவிந்தர் எழுதும்பொழுது அது கையின் செயல். கை

எழுதுகிறது. இது பெரும்பாலும் ஆழ்மனத்தால் நடைபெறுகிறது. சில சமயம் இது முழுமையாக இருக்கும். உடலில் நரம்புமண்டலம் செயல்படுகிறது. இது தன்னையறியாத செயல். மனம் எண்ணத்தை அறியும். மனம் எண்ணத்தால் ஆக்ரமிக்கப்பட்டுள்ளது. முழு மனிதனும் ஆழ்மனத்துள் அமிழ்ந்து விடுவான். இருந்தாலும் பழக்கமான செயல்கள் தொடரும். அவையும் மனத்தால் இயங்குபவை. பலவகையான உறக்கத்தில் அவை நிகழும். அல்லது மனம் பரமாத்மாவை அடையும். இருந்தாலும், மனிதன் சுறுசுறுப்பாக இருப்பான். அப்படி அவனுள் சுறுசுறுப்பாக செயல்படுவது அடிமனம். அது உடலைச் சேர்ந்தது. சில வகைகளான சமாதிகளில் அது நடக்கும். அதை யோக சமாதிநிலையென்போம். நம் உணர்ச்சிக்கும், தாவரத்தின் உணர்ச்சிக்கும் வித்தியாசம் உண்டு. பிரபஞ்சத்தில் சித்-சக்தியுண்டு. தானே அது தன்னை சிருஷ்டியாக வெளிப்படுத்தும். அது ஜடத்துள் உறங்குகிறது. தாவரத்தில் அது முழுமையாக உறக்கத்தினின்று விழிக்கவில்லை. பரமாத்மஞானம் அதன் ஆதி, அல்லது மூலம். செயலாற்றும் சக்தியை நாம் உணர்கிறோம். அது ஜடத்துள் மறைந்துள்ளது. அப்படி கிரகிக்கப்படுவதால் செயலாற்றும் சக்தியினின்று அது பிரிக்கப்படுகிறது. எனவே அதை ஆழ்மனத்தால் செய்யவேண்டியிருக்கிறது. உண்மையில் அது மனத்திற்குரிய செயல். மனிதனில் அது வெளிவருகிறது. இங்கு அது விழிக்க முயல்கிறது. அந்நிலையிலும் அது மறைமுகமாகச் செயல்படுகிறது. தன் ஞான ஆத்மாவை அது அறிவது மறைமுகமானது. இரண்டிலும் நடப்பது ஒன்றே. ஆனால் வேறுவேறு வகையாக அது நடைபெறுகிறது. அதன் பாங்கு வேறு. ஜீவியத்தின் நோக்கில் அவை வேறு, வேறு.

**183/17:** அணுவில் ஒன்றுள்ளது. அது நம்முள் உறுதி, ஆசையாகிறது. அதை நம்மால் இப்பொழுது கருத முடியும். நம்முள் ஒரு விருப்பு வெறுப்புண்டு. இது நம் கவர்ச்சியாலும், மறுப்பாலும் எழுவது, அவை தோற்றத்தால் வேறுபட்டாலும், அடிப்படையில் ஒன்றே. நாம் அதை ஆழ்மனம், ஜட இருள் என்கிறோம். இயற்கையில் இது எல்லா இடங்களிலும் உண்டு. இது உறுதி, ஆசையின் சாரம். இதுவரை இதைப் போதுமான அளவு நாம் அறியவில்லை. அது ஆழ்மனத்தைக்



குறிக்கிறது. அதனுடன் சம்பந்தப்பட்டது இது. இது ஜடஇருளில் உள்ளதுஎனவும் கூறலாம். இது நம்முள் கரைந்து மறைந்துள்ள புத்தி, அல்லது புலன் எனலாம். அவை நம்மை ஊடுருவியுள்ளன. எல்லா அணுக்களிலும் அது உள்ளது. அணுவால் செய்யப்பட்ட அனைத்திலும் இது காணப்படும். சக்தியிலிருப்பதால், அது அணுவில் காணப்படுகிறது. அதுவே அணுவின் ஸ்தாபன அமைப்பைக் கட்டிக் காக்கிறது. சக்திஎன்பது அடிப்படையில் வேதாந்தம் கூறும் சித்-சக்தி, சித்-தமஸ். இது ஜீவியம்-சக்தி. அது சத்புருஷனின் சித்-சக்தியாகப் பிறப்பிலேயே காணப்படுகிறது. இது பிராண சக்தியாக வெளிப்படுகிறது. தாவரத்தில் இது மனத்திற்குக் கீழ்ப்பட்ட புலனாகச் செயல்படுகிறது. ஆரம்பநிலை விலங்குகளில் இது புலனாசை, புலனுறுதியாகக் காணப்படும். வளர்ந்த விலங்குகளில் இது தன்னையறியும் புலனாக, தன்னையறியும் சக்தியாகக் காணப்படும். மனிதனில் அது மனோ உறுதி, ஞானமாகும். இது மற்ற அனைத்தையும் கடந்தது. வாழ்வுஎன்பது பிரபஞ்ச சக்தியின் படிப்படியான நிலை. அது ஜட இருள் விழிப்பாகும் பாதை, இது இடைப்பட்ட சக்தி. ஜடத்தில் இது ஆழ்ந்து புதைந்து, மறைபொருளாகயுள்ளது. தன்வேகத்தால் இது தன்னை மனத்திற்குக் கீழ்ப்பட்ட ஜீவனில் விடுதலை செய்யும். முடிவாக பரிணாம வளர்ச்சி பெறும் மனத்தால் விடுதலை பெறும். அப்பொழுது அது தன் தீவிரத்தின் முழு வாய்ப்புள் எழும்.

**184/18:** நாம் கருதவேண்டியவை பல. அவற்றைக் கடந்து தர்க்கரீதியான அவசியம்என ஒன்றுண்டு. நாம் மேலே வந்த முடிவு அப்படி நம்மைக் கட்டாயப்படுத்துகிறது. மேல்மன வாழ்விலும் அது தெளிவாகவுள்ளது. அங்கு சக்தி ஒளியாக எழுகிறது. இது பரிணாமத் தத்துவம். தாவரத்திலும், விலங்கிலும் வாழ்வுஎன்பது ஒன்றே. தாவரத்தில் வாழ்வு செயல்படும்விதம் விலங்கில் செயல்படுவதின்று வேறுபடுகிறது. இருந்தாலும், இரண்டும் ஒரே சக்தி. பிறப்பு, வளர்ப்பு, மரணம் அதன் முத்திரை. அதற்கு வேறுபல அம்சங்களுண்டு. விதையிலிருந்து உயிர் எழுவது, அழிவால் மரணம் வருவது, வன்முறையாலும், வியாதியாலும் அது கிட்டுவது ஆகியவை சில.

உணவுச்சத்தை புறத்திலிருந்து உள்ளே கிரகித்து உயிர் வாழ்வது ஓர்அம்சம். உயிர்வாழ ஒளியும், சூடும் அவசியம். இனவிருத்தி செய்வது, தன் உயிரைக் காப்பது என்பவையும் அது போன்ற அம்சங்கள். அதற்கு விழிப்பும், தூக்கமும் உண்டு. அதன் செயல்படும்வகை சோர்வு பெறும். புத்துணர்ச்சி பெறும். குழவிப்பருவத்தினின்று வளர்ந்து முதிர்ச்சி பெறும். மேலும் தாவரத்துள் வாழ்வின் சாரமுண்டு. அக்காரணத்தால் தாவரம் விலங்குக்கு உணவாகிறது. விலங்கு தாவரத்தாலும், அதில் உள்ள சக்தியாலும் வாழ்கிறது. அதற்கு நரம்புமண்டலம் உண்டு. தொடுஉணர்ச்சிக்குப் பதிலிறுக்கும். நாம் இவற்றையெல்லாம் ஏற்கலாம். இவை உயிரின் புலனறிவின் ஆரம்ப நிலை. அல்லது இவை வாழ்வின் மறைபொருளான சக்தி. இதை மனத்திற்குக் கீழ்ப்பட்ட புலனறிவுஎனலாம். இவை தாவரத்திற்கும் விலங்கிற்குமுள்ள ஐக்கியத்தை நெருங்கச் செய்யும். என்றாலும், இவை பரிணாமத்தில் ஒரு கட்டமே. இது இடைப்பட்ட கட்டம். விலங்கின் வாழ்விற்கும் ''ஜீவனற்ற'' ஜடத்திற்கும் இடைப்பட்ட நிலை. வாழ்வு ஜடத்திலிருந்து பரிணாமத்தால் எழும் சக்தியா? பரிணாமம் மனத்தில் முடிகிறதா? அப்படியெனில், நாம் இதை மட்டுமே எதிர்பார்க்கலாம். இதுவே உண்மையாக இருக்கலாம். இது நம்மை ஒரு முடிவுக்கு வரச் செய்யும். அதாவது வாழ்வு ஏற்கனவே ஜடத்துள் புதைந்துள்ளது. ஜடத்தின் ஆழ்மனத்திலும், ஜட இருளிலும் வாழ்வு ஏற்கனவே மறைந்துள்ளது. வேறு எங்கிருந்து அது வர முடியும்? பரிணாமம் உண்டெனில் சிருஷ்டி இருக்க வேண்டும். ஜடத்திலிருந்து வாழ்வு எழுவது உண்மை. நாம் ஒரு புதிய சிருஷ்டியை எதிர்பார்க்கலாம். அது மந்திரம் போல் விளக்க முடியாததாக இருக்கும். அது உண்மைஎனில் இதை இயற்கையுள் அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும். சிருஷ்டி சூன்யத்திலிருந்து எழ வேண்டும். அல்லது ஜடம் செயல்படுவதால் உண்டான பலனாக இருக்க வேண்டும். நாம் காணும் செயல்களில் அதற்கு விளக்கமில்லை. இதனுடன் சம்பந்தப்பட்ட எதுவும் இதை விளக்கவில்லை. இவற்றைக் கருதும்பொழுது வாழ்வு மேலிருந்து வந்ததுஎனலாம். ஜட வாழ்வைக் கடந்த லோகத்திலிருந்து வாழ்வு



வரலாம். அல்லது ஜடஉலகுக்கு மேற்பட்ட உலகமாக இருக்கலாம். முதலிரண்டு கொள்கைகளை நாம் கருதவேண்டிய அவசியமில்லை. அவை அர்த்தமற்றவைஎன்பதால் விலக்க முடியும். முடிவானதை ஏற்கலாம். இது நம் கருத்திற்கு ஒத்து வரும். சூட்சுமக் கோணத்தில் இது உண்மை. ஜட உலகுக்கு மேற்பட்ட உலகிலிருந்து உந்தும் சக்தியுண்டு. வாழ்வு எழுவதை அது நிர்ணயித்துள்ளது. இதனால் வாழ்வு ஜடத்திலிருந்து எழுகிறதுஎன்பதை மறுக்கும் அவசியமில்லை. வாழ்வு அடிப்படையான அவசியமான செயலாகும். வாழ்வின் உலகம் இருக்கலாம். வாழ்வு ஒரு லோகமாக இருக்கலாம். அது ஜடத்திற்கு மேலே அமையலாம். அதனால் பரிணாமத்தால் வாழ்வு எழும் எனக் கூறும் அவசியமில்லை. வாழ்வு லோகம் உருவம் பெறும் கட்டமாக இருக்கலாம். ஜீவன் பல கட்டங்கள் மூலம் அல்லது பல சக்திகள் மூலம் இறங்கி வருவதில் ஒரு கட்டமாக இருக்க முடியும். அது ஜட இருளை நோக்கிப் போகலாம். இதன் விளைவாக சிருஷ்டி ஏற்படும். அதற்கு ஜடத்தில் எல்லா சக்திகளும் உண்டு. அவை பரிணாமத்தால் பிறகு வெளிவரும். இப்படி மறைந்துள்ள வாழ்வின் அடையாளம் நம்மால் கண்டுபிடிக்க முடியாதவையாக இருக்கலாம். இவை ஆரம்ப நிலைக்குரியதோ முறைப்படாததோஎனக் கூறலாம். அவை ஜடத்துள் இருக்கலாம். அடையாளமே இல்லாமலிருக்கலாம். மறைந்த சக்தி முழு உறக்கத்திலிருப்பதால் இப்படி அமையலாம். இது முக்கியமில்லை. ஜடசக்தி சேர்க்கும் திறனுடையது. இது உருவம் பெற்று அழிகிறது. அங்கும் அதே சக்தி வேறு கட்டத்தில் அமைகிறது. இதுவே வாழ்வின் சக்தி, தன்னை பிறப்பு, வளர்ப்பு, மரணத்தில் வெளிப்படுத்துகிறது. புத்தியாக இது சூன்ய மயக்கத்தில் செயல்படுவது போல் செயல்படுகிறது. அது ஆழ்மனம். இதுவும் அதே சக்தியே. இதன் வேறொரு கட்டம் மனம். தன்னுள் இது வாழ்வை வைத்திருப்பது அதன் சுபாவம். அதன் பாணி நாம் அறியும் வகையில் இல்லாமலிருக்கலாம். இதுவரை வெளிவாராத மனம், வாழ்வை அவை தன்னகத்தே கொண்டுள்ளன.

**186/19:** வாழ்வு எங்கும் ஒன்றே. அணுவிலிருந்து மனிதன்வரை வாழ்வு ஒன்றேயாகும். அணுவில் ஆழ்மனப்பொருள் உள்ளது. அதில்

ஜீவனின் சலனம் உண்டு. இரண்டும் விலங்கில் வெளிப்படுகிறது. தாவர வாழ்வு இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளது. அது பரிணாமப்பாதை. சித்-சக்தியின் பிரபஞ்சச் செயல் வாழ்வாகும். ஜடத்தில் வாழ்வு ஆழ்மனம் மூலம் செயல்படுகிறது. அனைத்தையும் செய்வது இச்சக்தி. இது உடலையும் ரூபத்தையும் சிருஷ்டித்து, பாதுகாத்து, அழித்து, மீண்டும் சிருஷ்டிக்கிறது. இது நரம்பு சக்தியால், அதன் லீலைமூலம் இதைச் சாதிக்க முயல்கிறது. தூண்டும் சக்தி பரிமாறும் ஓட்டத்தால் இது நடைபெறுகிறது. உடலில் இது விழிப்பான புலன் உணர்வை உண்டுபண்ணுகிறது. இச்செயலில் மூன்று கட்டங்கள் உள. ஜடத்தின் உறக்கம் கடைசி கட்டம். அதன் அதிர்வுண்டு. இது முழுவதும் ஆழ்மனத்திற்குரியது. இது இயல்பான செயலாகத் தோன்றுகிறது. மனத்திற்குக் கீழ்ப்பட்ட பதில் இடைப்பட்ட கட்டம். அங்கும் பதில் கூறும் திறனுண்டு. அது ஜீவியத்தின் எல்லை. விழிப்பான மனப்பான்மை உயர்ந்தது. வாழ்வு அதை வளர்க்கிறது. அது புலனுணர்வாகத் தோன்றும். அதன் மனம் உணர வல்லது. இது மாறும் நிலை. இது முன்னேற்றத்தின் அடிப்படை. புலனறிவும், புத்தியும் இதன்மூலம் வளர்கின்றன. இந்த இடைப்பட்ட கட்டத்தில் நாம் வாழ்வைப் பிடிக்கலாம். வாழ்வு மனம், ஜடத்திலிருந்து வேறுபட்டது. உண்மையில் எல்லாக் கட்டங்களிலும் வாழ்வு ஒன்றே. எங்கும் வாழ்வு மனத்திற்கும் ஜடத்திற்கும் இடையே காணப்படும் வாழ்வு ஜடத்தாலானது. அதில் மனம் உண்டு. சித்-சக்தியின் செயல் வாழ்வு. அது உருவம் பெறும் பொருள்மட்டுமன்று. அது மனத்தின் செயல் மட்டுமன்று. ரூபமும், பொருளும் அதன் புறத் தோற்றம். சத்-புருஷனை ஜீவனுள்ளதாக்குவது வாழ்வு. பொருள் உருவாகும் காரணமும், அதன் ஆதரவுமாகும். இது இடைப்பட்ட நிலை. இது மூலமாகவும் ஆதரவாகவும் உள்ள நிலை. விழிப்பான மனம் புறத்தில் செயல்படுவது இதன் ஆதரவைப் பெறுகிறது. புலனின் செயலில் வாழ்வு வெளிப்படுகிறது. புருஷனின் சக்தி பெறும் இடைப்பட்ட நிலையாக அது செயல்படுகிறது. புலனின் செயலுடன், எதிர்ப்புமுண்டு. வாழ்வின் சிருஷ்டித்திறனின் ரூபமிது. இது ஆழ்மனம் அல்லது ஜட இருளால் செயல்படும். தன் பொருளால் இது கிரகிக்கப்படுகிறது.



இது செயலை ஆதரித்து வெளிப்படுத்துகிறது. வாழ்வின் புற வெளிப்பாட்டை அது நடத்துகிறது. அதை நாம் மனம் என்கிறோம். தீவிரமான கருவியாக மனம் இதைச் சாதிக்கிறது. தன் ரூபங்களை இதனால் மாற்ற முடியும். வாழ்வு, ஜட ரூபங்களிலும் அது செயல்படும். வாழ்வு அவற்றை இணைக்கும் இடைநிலையாகச் செயல்படும். இவ்விரண்டிற்கும் - மனம், ஜடம் - வாழ்வு தூதன். வாழ்வு அதன் கருவி. வாழ்வின் ஓட்டம் தொடர்கிறது. இது துடிக்கும் நரம்புணர்ச்சி. ரூபத்தின் சக்தியை வாழ்வு புலனுணர்வாகத் தாங்கி வரும். இது மாற்றும். மனத்தின் சக்தியை உறுதியாக இது கொண்டு வரும். இது ஜடத்தை மாற்றும். இந்த நரம்பின் சக்தியை நாம் வாழ்வென்கிறோம். இது பிராணன். இந்தியர் கூறும் வாழ்வின் சக்தியிது. விலங்கில் நரம்பு சக்தியாவது வாழ்வின் ரூபம். எல்லா ரூபங்களிலும், இதே பிராண சக்தியுண்டு. இது அணுவரை செல்லும். மூலத்தின் சாரத்தைக் கருதினால் இது எங்கும் ஒன்றே. எங்கும் இது சித்-சக்தியின் செயலாகும். தன் ரூபங்களின் அடிப்படை வாழ்வில் இது வாழ்வின் ஆதரவைப் பெறுகிறது. இச்சக்திக்கு புலனும், மனமும் உண்டு. இது இரகஸ்யமாகச் செயல்படுகிறது. முதலில் இது ரூபத்துள் புதைந்துள்ளது. வெளிவர தன்னை ஆயத்தம் செய்கிறது. முடிவாக இது மறைவிலிருந்து வெளிவருகிறது. இதுவே வாழ்வின் முழு முக்கியத்துவம். இது எங்கும் நின்று நிலவுகிறது. ஜடமான பிரபஞ்சத்தில் அது வெளிப்பட்டு, அதனுள் வாழ்கிறது.

## வாழ்வு:

**173/1:** மனம் இறைவனில் உற்பத்தியானது.

புருஷனுக்குப் பிரகிருதியுண்டு.

பிரகிருதி புருஷனுடைய பல்வேறு செயல்பாடுகள்.

அவை பிரபஞ்சத்திற்குரியவை.

அஞ்ஞானத்தை ஏற்ற ஆத்மாவுக்கு பிரகிருதி முரண்பாடு, இரட்டைஎனத் தெரிகிறது.

**173/2:** மனம் ஆழ்மன உறுதி.

ஜடமான உலகம் ஆழ்மனத்தால் சிருஷ்டிக்கப்பட்டது.

**174/3:** சத்புருஷன் ரிஷியாக, முனிவராக உலகில் தன்னைத் தன்னுள் வெளிப்படுத்த முனைந்து யுகாந்த காலமாக அனைத்தையும் அதனதன் சத்தியப்படிப் பரிமளிக்கச் செய்வது சிருஷ்டி.

**175/4:** உலகை ஆழ்மனம் சிருஷ்டிக்கவில்லை, சத்தியஜீவியம் சிருஷ்டித்தது.

**175/5:** வாழ்வுஎன்றால் என்ன*?* ஏன் அது தீமையைப் படைத்தது*?*

**176/6:** தீவிரமாகத் தானே செயல்படும் சக்தி வாழ்வு.

அழிவைத் தொடர்ந்து நாடி வாழ்வு வளர்கிறது.

மரணத்திலும் வாழ்வின் ஓட்டம் நிற்காது.

**176/7:** பூமியை அழித்த பின்னும் பிரபஞ்சத்தை ஊடுருவும் சக்தியாக வாழ்வு நிலைத்து விளங்கும்.

**177/8:** தாவர, விலங்கு வாழ்க்கைக்கும், நம் வாழ்வுக்கும் என்ன மாறுபாடு*?*

**177/9:** வாழ்வின் வளரும் வண்ணங்களை வாழ்வுஎனக் கொள்வது தவறு.

**178/10:** தாவரத்திலும், உலோகத்திலும் உயிரிருப்பதாக விஞ்ஞானம் கூறுகிறது.

எல்லா இடங்களிலும் வாழ்வுஎன்பது ஒன்றே.

**179/11:** தாவரத்தில் உயிர் இருப்பதாக ஒரு பிரபல இந்திய விஞ்ஞானி நிரூபித்துள்ளார்.

**180/12:** உடலின் உறுப்புகள் சிதையாவிட்டால், ஓர் அளவுக்குள், பிரிந்த உயிரை மீண்டும் புதுப்பிக்கலாம்.

**180/13:** பிரபஞ்ச உறுதி உடலிலிருந்து விலகுவது மரணம்.

விலகியது அழிவை ஆதரித்தால் மரணம் எழும்.

**181/14:** தீவிரமான சக்தியான வாழ்வை தாவரத்தில் காண்பது போல் எளிதில் உலோகத்தில் காண முடியும்.



**182/15:** தாவரத்தில் பிராணனைக் கண்டபடி உலோகத்திலும் காணலாம்.

**183/16:** விழிப்பான சக்தி தன்னைச் செயலிலிழந்தால் மனம், ஆழ்மனமாகும்.

அதே சக்தி பரமாத்மாவை எட்டினால், ஆழ்மனம் மனமாகும்.

**183/17:** ஜடஇருள் பரிணாமத்தால் ஜீவியமாகும் அரங்கம் வாழ்வு.

**184/18:** ஜடத்திலிருந்து வாழ்வு பரிணாமத்தால் எழ, அது ஏற்கனவே ஜடத்துள் கரைந்து மறைந்து கலந்திருக்க வேண்டும்.

புருஷன் படிப்படியாக மாறி உருவாகும் சக்தியாக ஜடத்துள் மறைந்திருக்க வேண்டும்.

**186/19:** வாழ்வு ஜடஉணர்ச்சியை மனத்திடம் சமர்ப்பித்து மனோ உறுதியாக அதை மாற்றி, அதற்கு ஜடத்தைக் கட்டுப்படுத்து-கிறது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் ஆசையால் நிர்ணயிக்கப்படும் செயலால் கட்டுண்டுள்ளான். அவனால் சச்சிதானந்தத்தைக் கடந்து ஆதியை அடைய முடியும். செயலைத் திருவுருமாற்றம் செய்து சத்தியஜீவியத்தின் மூலம் இதை நிறைவேற்றலாம். செயலைத் தவிர்த்து அதன் சாரமான ஆன்மாவின் மூலம் தெய்வலோகத்தின் வழியாகவும் இதை அடைய முடியும். நம் கரணங்களுக்குரிய புருஷன் ஒன்றின் மூலமாகவும் இதைச் சாதிக்கலாம்.

***செயலைத் தவிர்த்தும், திருவுருமாற்றியும் பிரம்மத்தையடையலாம்.***

# அன்பர் கடிதம்

கலியுக தெய்வமாம் அன்னை சமீபத்தில் என் வாழ்வில் நிகழ்த்திய அற்புதத்தை மலர்ந்த ஜீவியம் அன்னை பக்தர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அன்னையின் அற்புதத்தை நினைத்து நிமிடத்திற்கு நிமிடம் ஆச்சரியப்படுகிறேன்.

ஜனவரி 26ஆம் தேதி 2010, நான் என் மனைவி, மகளுடன் மகளின் திருமணத்திற்கு சென்னை, தி.நகர், ரங்கநாதன் தெருவில் சில கடைகளில் சுமார் 12 ஆயிரத்திற்கு ஜவுளிகள் வாங்கினோம். பின்பு அதே தெருவில் உள்ள முதல் மாடியில் ஒரு டெய்லரிடம் ரவிக்கைகள் தைக்கக் கொடுத்துவிட்டு காத்துக் கொண்டிருந்தோம். கடைக்கு வெளியில் உள்ள மாடிப்படியில் ஜவுளிகளை வைத்துக் காத்துக் கொண்டிருந்தோம். இரவு 9 மணிக்கு ரவிக்கைகள் தைத்து முடிந்துவிட்டதுஎன டெய்லர் கூறியதில், ஒரு நிமிடம் எங்களை மறந்து ஜவுளிகளை மாடிப்படியில் வைத்துவிட்டு பணம் கொடுக்க உள்ளே சென்றோம். உள்ளே சென்ற நான் தவற்றை உணர்ந்து உடனடியாக மாடிப்படிக்கு விரைந்தபோது நாங்கள் விட்டுச் சென்ற 3 பைகளில் 1 பையை காணவில்லை. அதனுள் ரூ.7,000/-ற்கு மேலான ஜவுளி இருந்தது. ஒரு நிமிடம் என்ன செய்வதென்றே புரியவில்லை. எங்களை சுதாரித்துக் கொள்ள சிறிது நேரம் ஆனது. சுற்றி இருந்தவர்களைக் கேட்டால் தெரியாதுஎனக் கூறுகிறார்கள். மனம் பித்துப் பிடித்ததுபோல் இருந்தது. அன்னையே நீதான் எங்களை இந்த இக்கட்டிலிருந்து விடுவிக்க வேண்டும்என ஆழ்மனத்திலிருந்து வேண்டிக்கொண்டே கீழ்த் தளத்திலும், மேல் மாடியில் உள்ள சில அறைகளிலும், அவர்கள் அனுமதியுடன் தேடினோம். எங்கும் கிடைக்கவில்லை. மனம் மட்டும், பொருளை எங்களிடம் சேர்ப்பிக்கச் சொல்லி அன்னையிடம் தொடர்ந்து வேண்டிக் கொண்டிருந்தது. எதற்கும் மேல் மாடியிலிருந்து பக்கத்தில் எங்காவது போட்டிருப்பார்களாஎன மனதிற்குத் தோன்றவே, நான் அங்கிருந்த சில பேருடன் மொட்டைமாடிக்குச் சென்றேன் (3வது மாடி). அங்கிருந்து கீழே எதுவும் தெரியவில்லை. அன்னையின் அருளால் அங்கிருந்த உடைந்த ப்ளாஸ்டிக் தண்ணீர் தொட்டியைப் பார்த்தபோது ஏற்பட்ட உணர்ச்சியை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அங்கே, தொலைந்த அந்தப் பை எவ்வித சேதாரமும் இன்றி அப்படியே இருந்தது. எந்தப் பொருளும் களவாடப்படவில்லை. காணாமல்போன பாஸ்போர்ட்டை கண்டுபிடித்துக் கொடுத்தார் அன்னை என 'அன்னையின் தரிசனம்' என்ற புத்தகத்தில் படித்து, இவ்வாறு நடக்குமாஎன்று நினைத்த எனக்கு, நிதர்சனமாக, 'நான் இருக்கிறேன். என்னை நம்பியவர்களை கைவிடுவதில்லை' என உணர்த்திய அன்னையின் அற்புதத்தை அனுபவித்தவர்கள் மிகவும் பாக்கியசாலிகள்எனவும், நீங்களும் அன்னையின் அருள்பெற அன்னையைச் சரணடைய வேண்டும்எனவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*-- ல. நாகராஜன், மதுரை*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உறவை விடாமல் சமர்ப்பணத்தை மேற்கொண்டால் பெரும்பாலோர் விலகுவது தெரியும். அவர்கள் விலக்கப்பட வேண்டியவர்கள். மீதியிருப்பவர்கள் மூன்று வகையினர்.

1. யோகத்திற்குரியவர்கள்.
2. யோகத்தின் எதிரிகள்.
3. உன்னால் விடமுடியாதவர்கள்.

***சமர்ப்பணம் மனிதர்களை விலக்கும்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**978) பரிபூரணத் திறமையும், முறைமையும் நல்ல செயலைச் சூழுமானால் ஜடம் உயர்ந்து சத்தியஜீவியத்தை எட்டும்.**

***திறமையும் முறைமையும் சத்தியஜீவியத்தைச் சாதிக்கும்.***

* ஆதிமனிதனுக்கு நம் அறிவு இருந்ததுஎனப் பகவான் கூறுகிறார். நடைமுறையில் அதை நாம் காண முடியும். எளிய மனிதனைக் கவனித்தால் அவனுக்குப் பெரிய மனிதர்கட்குள்ள தெளிவு இருப்பதைக் காணலாம். பகவான் *The Life Divine* முதல் அத்தியாயத்தில் சத்தியஜீவியத்தை எட்ட நாம் செய்ய வேண்டியதை ‘‘முயற்சியை முடிவு வரை கைவிடக்கூடாது’’ என்கிறார். இம்மனநிலையை எளிய மனிதர்கள் அநேகரிடம் காணலாம். அப்படியிருந்தும் ஏன் அவர்கள் எளியவர்களாக இருக்கிறார்கள்எனில் அவர்களிடம் வேறொரு முக்கிய குறை இருக்கும்.

  ‘ஆமையும் முயலும்’ என்ற சிறு குழந்தைகட்கான கதை விடாமுயற்சியைக் கூறுகிறது. **30,000 வருஷத்தில் மனிதன் பெறக்கூடிய சத்தியஜீவியத்தை இந்த ஜென்மத்தில் பெற விடாமுயற்சி மற்ற குறைகளின்றி இருந்தால் போதும்**.

  திறமை சாதிக்கும். பெரிய அளவு சாதிக்கும். திறமை மட்டும் முழுமையாகச் சாதிக்காது. முறைமை அவசியம். அதுமட்டும் பூரணமாகச் சாதிக்காது. இவையிரண்டும் பூரணமானால் நல்லதையும் சாதிக்கலாம், கெட்டதையும் சாதிக்கலாம். யோகம் சத்தியஜீவியத்தை இம்முறையால் எட்டும்.

* நமக்குப் பிரச்சினை எழுந்தால் பிரார்த்தனையால், சமர்ப்பணத்தால் தீர்க்கிறோம்.



இது பிரச்சினை தீரவும், வாய்ப்பு பலிக்கும் முறை.

பிரார்த்தனை பிரச்சினையைத் தீர்த்தால், மீண்டும் பிரச்சினை வருவதை பிரார்த்தனை தடுக்காது.

இம்முறை தடுக்கும்.

ஒரு காரியத்தை இம்முறையால் செய்தால் பிரச்சினையை விலக்கி, வாய்ப்பைப் பூர்த்தி செய்யும்.

பிரச்சினை விலகுவது வெற்றி - முதல் நிலை.

பிரச்சினை விலகுவதால் ஒரு வாய்ப்பும் எழுவது - இரண்டாம் நிலை வெற்றி.

சூட்சும சக்தி செயல்பட்டால் இது நடக்கும்.

பிரச்சினை விலகி பிரம்மாண்டமான வாய்ப்பு எழுவது - முடிவான மூன்றாம் நிலை.

இது காரண லோகம் (causal plane, சத்தியஜீவியம்) செயல்படுவது.

ஜேன் திருமணத்தில் பிரச்சினை எழுந்து தீர்ந்தது. அதுவே எலிசபெத் நாடியது.

அவள் முயற்சியில் தவற்றைக் கைவிட்டு, சரியானதை ஏற்க முயன்றாள்.

விக்காம் கூறிய பொய்யை கைவிட்டு டார்சி கூறிய மெய்யை ஏற்றாள்.

இது உணர்விலிருந்து மனத்திற்குப் போகும் பரிணாமமுறை.

இதனால் சூட்சுமத்தைக் கடந்த காரணலோக சக்தி செயல்பட்டது.

£100 சம்பாதிக்கும் விக்காமை, பொய்யான தறுதலை விக்காமை மணக்க முயன்றவளுக்கு £10,000 பவுன் வருமானமுள்ள பெரிய மனிதன் வரனாக வந்தான்.

அவள் செயல் நல்லது. அதை முடிக்கும் முழுத் திறமையும் எலிசபெத்திற்கு இருந்தது.

முறைகளை முழுமையாகப் பின்பற்றினாள். தனக்கென

திருமணத்தையும் நாடவில்லை.

ஜேனுக்கு அவள் விருப்பப்படி மணம்முடிந்ததும், அத்துடன் தனக்கு சத்தியஜீவியமாக டார்சி வந்ததையும் கண்டாள்.

*எலிசபெத்திற்கு டார்சி சத்தியஜீவியம்.*
*அன்பருக்குப் பெரிய திரண்ட பிரம்மாண்டமான செல்வம் சத்தியஜீவியம்.*

நாம் செய்யும் எந்த நல்ல செயலும் திறமையும், முறைமையும் குறையாமல் விடாமுயற்சியுடன் செய்தால், அது சத்தியஜீவியமாகப் பலிக்கும். திரண்ட பெரிய செல்வம் சத்தியஜீவியத்திற்கு முன்னுரையாக வரும்.

 o o o

**979) நற்செயல்எனில் பழைய நோக்கங்கள் விலக்கப்பட வேண்டும். கடந்ததுஎன்பதால் மட்டும் நல்லதாகாது.**

* நாம் கடந்ததைப் போற்றுகிறோம். பிறந்த மண்ணை தெய்வமாக, பூமாதேவிஎன வணங்குகிறோம். பெற்றோர், சம்பிரதாயம், சடங்கு, சாஸ்திரம், வேத காலம், சேர சோழ ராஜாக்கள், புத்தர், ஏசு, காந்திஜீ ஆகியவை நமக்கு உயர்ந்தவை.

***கடந்தவை புனிதம்என்பது கொள்கை.***

* காலம் மாறுகிறது. காலத்திற்கேற்ப நாமும் நடையுடை பாவனைகளில் மாறிக் கொள்கிறோம். நாலு பேர் மாறுவதால் நாமும் மாறுகிறோம். நமக்காகச் சில இடங்களில் மாறுகிறோம். மாறுவதற்குச் சட்டம் உண்டா? உண்டுஎனில் என்ன சட்டம்?

***நல்லவற்றை ஏற்க வேண்டும்.***
***அல்லவற்றை விலக்க வேண்டும்.***

* எவை நல்லவை, எவை அல்லவை? ஆசிரமம் உயர்ந்த இடம் எனப் போனோம். பகவான் அன்னைக்குப் பிறகு ஆசிரமத்தை



மூட வேண்டும்என்றார். 1972இல் அன்னை, இனி அன்பர்கள் ஆசிரமம் வரக் கூடாதுஎன்றார். அது உலகில் வெளிவர *80-85* ஆயிற்று. அதற்குப் பிறகு அங்கு செல்லக்கூடாது. அறியாமல் சென்றால் விளைவுகளைக் கொண்டு முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும்.

* நல்ல செயல் புதிய செயலாகவும், புரட்சிகரமானதாகவுமிருக்கும். அதனால் அது எதிர்க்கப்படும், ஏற்கப்படாது. கேலி செய்யப்படும். அவை தடையாகும். உலகம் ஏற்காது என்பதால் இலஞ்சம் கொடுக்காமல் வேலை நடக்காது, உரமில்லாமல் நல்ல மகசூல் வாராது, பள்ளியில் பயிலாமல் வேலை கிடைக்காது, திருமணமாகாமல் ஒருவர் குடும்பம் நடத்த ஊர் சம்மதிக்காது. இவற்றைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. சில சமயங்களில் இலட்சியமாகச் செயல்பட இவை தேவை. **பழைய நோக்கங்கள் அனைத்தும் விலக்கப்பட்டு, பண்புடனும், தன்மையுடனும் பொறுமையாக, நெறியாக செயல்பட முடிவு செய்தால் உடன் வேலைசெய்ய எவரும் முன்வரமாட்டார்கள்**. எலக்ஷனில் நிற்பவர் போஸ்டர் அடித்து ஒட்ட முடியாவிட்டால், தொண்டர்களுக்கு செலவு செய்யாவிட்டால், ஓட்டுப்பெற பணம் செலவு செய்வது தவறுஎன்று முடிவு செய்தால், நடைமுறையில் எலக்ஷனுக்கு நிற்க முடியாது. நின்றால் உடன் வேலை செய்ய எவரும் வரமாட்டார்கள். வேட்பாளரை ஆமோதிக்கவும் ஆளிருக்காது. வாக்காளர்கட்கு, இப்படி வேட்பாளரிருப்பதாகவே தெரியாது. இதை ஒருவர் இன்று பின்பற்ற முடியாது. அரசியலிலேயே ஒருவர் நெடுநாளாக இம்மனப்பான்மையுடன் வேலை செய்து வந்தால், அவர் இன்று எலக்ஷனுக்கு நிற்க நிர்ப்பந்தமிருந்தால், அவர் அன்னையின் அன்பரானால், பழைய அத்தனை முறைகளையும் விலக்கி, முழுவதும் அன்னை முறைகளைப் பின்பற்றினால் அவருக்கு அனைத்தும் ஒத்துழைக்கும். வெற்றி பெறுவார். அன்பர்கள் அவர்கள் வாழ்வில் இயல்பாக எழும் செயலை இலட்சியமாகப் பூர்த்தி செய்ய முயன்றால் அங்கு இக்கருத்து பலன் தருவதைக் காணலாம்.

எலக்ட்ரிசிட்டி ஊழியர்கட்கு மாமூல் தாராமல் வேலை நடக்காது என்பது அனுபவம். அதை நம்பாமல், அந்த வேலைக்குப் போனால், அதில் பழைய முறைகளைக் கைவிட்டால், இராகு காலம் பார்க்காவிட்டால், சிபார்சு தேடாவிட்டால், இலஞ்சம் கொடுக்காவிட்டாலும் ஓரளவு அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்என்று மனம் கருதினால் அதையும் விலக்கிவிட்டு, நிதானமான பொறுமையுடன், தன்மையாக, இனிமையாக, மனம் 'நான் அன்பன். இலஞ்சம் தர மாட்டேன்' என்று கர்வப்படாவிட்டால் Electricity Board ஊழியர்கள் வருவார்கள், வேலை நடக்கும், தடங்கலிருக்காது. அன்பர்கள் அனுபவத்தில் இது, சர்க்கார் ஆபீஸ்களில், பாங்கில், ஊழல் நிறைந்த மார்க்கட்டில், மாமூல் மாமூலான கல்லூரிகளில், **காரியம் நடப்பதைக் கண்டது ஏராளம்**. இலஞ்சம் கொடுக்க மறுத்தாலும், மனம் இலஞ்சம் கொடுக்க மறுத்தாலும், மனம் இலஞ்சம் கொடுக்காமல் காரியம் முடியாதுஎன நம்பும். இராகு காலத்தில் வேலை அமைந்தால் அரை மணியில் என்ன ஆகப் போகிறது, ஏன் அவசரப்பட வேண்டும்என்பது, மனம் இராகு காலத்தை நம்புகிறது, இலஞ்சத்தை நம்புகிறது, பழைய முறைகளை நம்புகிறதுஎனப் பொருள். அந்தநம்பிக்கைப் போகும்வரை இக்கருத்து பலிக்காது. தகப்பனார் பேச்சைக் கேட்டு அடங்கி நடப்பது நல்லது எனில் அதையும் செய்யும் மனப்பான்மையிருக்கிறது. பரம்பரை என்பதால் செய்யலாம், நல்லதைத் தகப்பனார் சொல்கிறார் என்பதால் செய்யலாம், அன்னை சொல்கிறார் என்பதற்காகத் தகப்பனாரை ஏற்கலாம். மறுக்கலாம். **மனப்பான்மை செயலை நிர்ணயிக்கும், அதுவே மனத்தை நிர்ணயிக்கும்**. அதுவே யோகப்பலனை நிர்ணயிக்கும். அறிவில் தெளிவு தேவை. மனம் தெளிவாக இருக்க வேண்டும். கொள்கை புரிய வேண்டும். ஏன் செய்கிறோம்என அறிய வேண்டும். அதுவே முக்கியம்.

○ ○ ○

**980) பொறுப்பற்றதாகத் தெரியும் அளவுக்குப் பற்றற்றிருப்பது**



**எதையும் ஆரம்பிக்க மறுக்கும் சர்வாரம்பப் பரித்தியாகியின் நிலை.**

*பற்றற்ற நிலை பொறுப்பற்றதாகத் தெரியும்.*

* காரியத்தில் பற்றுஎன்பது பலனில் பற்று, செய்வதில் பற்று, பொறுப்பில் பற்றுஎனப் பல நிலைகள் உண்டு. பலனில் பற்றற்றிருப்பது நிஷ்காம்ய கர்மம். செய்வதில் பற்றில்லாமலிருப்பது அன்னை கோட்பாட்டை ஏற்று காரியம் செய்வதாகும். பொறுப்பில் பற்றில்லாமலிருப்பது அன்னைமீது நம்பிக்கை கொள்வதாகும். பொறுப்பு நம்முடையது என்ற வரையில் நம்பிக்கை நம் மீதுள்ளது - தன்னம்பிக்கை - எனப் பெயர். சமர்ப்பணம் பூரணமாகி சரணாகதியானால், பொறுப்பு அன்னையுடையது, நம்முடையதன்று என்றாகும். அது உயர்ந்த யோக நிலை. அந்நிலையில் நாம் எதையும் ஆரம்பிப்பதில்லை. அன்னை உத்தரவு கொடுத்தால் ஆரம்பிக்கலாம். அன்னை ஆரம்பிக்கச் சொல்லியதை நாம் ஆரம்பித்தால், நடத்துவது அவர்கள் பொறுப்பு. **அது நம்மை அன்பனாக்கும், யோகத் தகுதியுள்ள அன்பனாக்கும். அவர் யோகத்தை ஆரம்பித்தால் பலிக்கும்**.

* பார்வைக்கு அப்படிப்பட்ட அன்பர் பொறுப்பற்றவராகத் தோன்றும்.

  **பொறுப்பே உருவானவரை உலகம் பொறுப்பற்றவராக நினைக்கும்**.

  பொய்யே சொல்லியறியாதவன், பொய்யே சொல்ல முடியாதவரை இந்த உலகம் பொய்யன்எனக் கூறும்.

  தன் உடமை, உரிமை, உயிர், மானம், மரியாதையைக் குடும்பத்திற்காக, ஊருக்காக, கொள்கைக்காக, நாட்டுக்காகத் தியாகம் செய்தவனை சுயநலமிஎன உலகம் கூறும்.

  எந்தக் குடும்பத்திற்காகத் தியாகம் செய்தானோ அதே குடும்பம் அவனை அடக்க, அழிக்க முழுமுயற்சி செய்யும்.

* 10 பேர் சேர்ந்த செய்து காரியம் கெட்டுப்போனால் அவற்றுள் அன்பர் ஒருவரானால் அன்பர் காரியம் கெட்டுப்போனதிற்கு தம் பங்கை உணர்ந்து மனம் மாறினால் கெட்ட காரியம் கூடிவரும். **10 பேரும் மாறாமல் காரியம் எப்படிச் சரிவரும் என்பது கேள்வி**.

  பொறுப்பற்றவராகத் தோன்றும் அன்பர் அனைவர் பொறுப்பையும் ஏற்றவர். அவர் மாறுவது அனைவரும் மாறுவதற்குச் சரி, சமம். மற்றவர் அனைவரும் காலத்தில் உள்ளனர். அன்பர் அன்னை காலத்தில் - மூன்றாம் நிலைக் காலத்தில் - உள்ளவர் என்பதால் அவரால் அனைவர் சார்பாகவும் மாற முடியும்.

* *Pride and Prejudice*இல் லிடியா ஓடிப்போனாள். அவள் ஓடிப் போகும் இடத்திற்கு அனுப்பியது தாயார். அதைத் தடுக்க வேண்டும்என்று எலிசபெத் தகப்பனாரிடம் கூறியதை அவர் அதை ஏற்க மறுத்தார். ஜேன் திருமணத்தைத் தடுத்தது காரலின், டார்சி. ஜேன் காரலினை நம்புகிறாள். அந்த நம்பிக்கை அவளை பாதிக்கும், ஜேன் திருமணம் தடையாகி விட்டது. லிடியா ஓடிப் போய்விட்டாள். விக்காம் உடன் ஓடியிருக்கிறாள். இனி யார் இந்தக் குடும்பத்தில் சம்பந்தம் செய்து கொள்வார்கள். குடும்பமே நாசமாய் விட்டது. பென்னட் மாறப் போகிறாரா? அவர் மனைவி ஆர்ப்பாட்டத்தை விடுவாளா? லிடியா தவற்றை இந்த ஜென்மத்தில் உணரப் போகிறாளா? விக்காமை என்ன செய்ய முடியும்? இவர்கள் எல்லாம்மாறி வீட்டுநிலை மாறவேண்டும். இது யார் கையில் உள்ளது? நடக்கின்ற கதையா?

  எலிசபெத் டார்சி கடிதத்தைப் படித்து விஷயமறிந்து, மனம் மாறி, வெட்கித் தலை குனிந்தாள். அவள் மனமாற்றம் பெரியது, பிரம்மாண்டமானது. தகப்பனார் செய்த தவற்றை உணர அது உதவியது. ஜேன் மனம் மாறியது. தாயார் நிலை, லிடியா, விக்காம் நிலை மாறவில்லை. எல்லாப் பிரச்சினைகளும் ஒருவர் மனமாற்றத்தால் நிகழ்ந்தன.



☆ அத்துடன் டார்சி எலிசபெத்தை லேடி காதரீனை மீறி மணந்தாள்.

☆ மனமாற்றம் மாநிலத்தை மாற்றும்.

☆ **ஒருவர் அனைவருடைய குறையையும் நிறையாக மாற்றலாம்.**

○ ○ ○

**981) தனக்கே அகத்துள் பலனடையாதவன் புறத்தில் பிறருக்கு உதவிசெய்ய முன்வருவது வழக்கம். மகா புருஷர்கள் மற்ற ஆத்மா மீது கருணை கொள்வது தங்கள் நிறைந்த அகவெளியின் செறிவை அடுத்தவர்க்கு அகவெளிப்பாடாக அளிக்க முன்வருவதாகும்.**

***உதவாக்கரை உதவி செய்ய முன்வருவான்.***

* கையில் பிறருக்குக் கொடுக்க எதுவும் இல்லாதபொழுது தாராள மனப்பான்மை எழுவது சகஜம். அப்படி எழுவது உண்மையான உணர்ச்சி.

  அவருக்கு சொத்து வந்தபின் அந்ததாராள மனப்பான்மை மறைவதும் சகஜம்.

* கொடுக்கப் பிரியப்படுபவருக்கு வசதி வந்து தாராளமாக உதவ ஆரம்பித்தவுடன் கிடைக்கும் முதல்அனுபவம், கொடுக்க முடிவதில்லை, பெறுபவர் அனுமதிப்பதில்லை, கொடுப்பதால் பிரச்சினைகள் எழுகின்றனஎன அறிந்து கொடுப்பதைச் சிரமப்பட்டு நிறுத்துவார்கள். அதை நிறுத்த முடியாமல் கொடுத்தவர் பெறும் பெரிய அனுபவம் தொந்திரவு உதவி பெற்றவரால்மட்டுமே வருகிறதுஎன்பது. அது தெரிந்தும் கொடுப்பதை நிறுத்த முடியாதவரை உறவினரும் நண்பர்களும் சேர்ந்து அழிப்பது தவறாத அனுபவம்.

* கொடுப்பதை நன்றியுடன் பெற்றுக் கொண்டால் பெறுபவரும், கொடுப்பவரும் மலர்போல மலர்வார்கள். அந்த அனுபவம்

யாருக்காவது இருந்தால் நானறியப் பிரியப்படுவேன்.

**ஸ்ரீ அரவிந்தம் அர்ப்பணத்தின் அடிப்படையைக் கொண்டது. யோகப் பலனை கொடுப்பது பாக்கியம், பெறுவதும் பாக்கியம், பெறுபவர் பலன் பெறுமாறு கொடுக்க முடிவது யோகப் பக்குவம்.**

* உள்ளபடி பலருக்கும் உதவத் துடிப்பவர்கள், வேலை பெற்றுத்தர, அட்மிஷன்பெற, சர்க்கார் ஆபீஸ் உதவி பெற்றுத்தர ஆசைப்படுபவர்கள் ஏராளம்.
  - ✫ அவர்கள் பலதரத்தினர்.
  - ✫ செல்வாக்கிருந்து உதவுபவர்கள். இவர்கள் குறைவு.
  - ✫ செல்வாக்கில்லாமல் உதவத் துடிப்பவர்கள் பலர். அவர்கட்குச் செல்வாக்குவந்தால் துடிப்பு குறையும்.
* மகா புருஷர்கள் தீட்சை தருவதுண்டு. அது ஒரு சாங்கியம்.

  பெரிய சாங்கியம். அன்னையும், பகவானும் தரிசனத்தால் தீட்சை அளித்தனர்.

  அவர்கள் திருவுருவப்படம் பெறுவதே தீட்சை.

  கனவில் குரு வந்து தீட்சை தருவதுண்டு.
* அகம் நிறைந்தால் பிறர் அகம் நிறைய அனுக்கிரஹம் தீட்சை.
* எதுவும் முடியாதவன், எந்த செல்வாக்குமில்லாதவன், எல்லா செல்வாக்குகளும் இருப்பதைப்போல் பேசுவது, எல்லோருக்கும் உதவ முன்வருவது வெறும்பேச்சு.
  - ✫ ஆன்மீகச் செறிவு ஆத்மநிறைவு.
  - ✫ ஆத்மா நிறைந்தால், நிறைந்து செறிந்தபின் அடுத்த ஆத்மாவுக்கு அது பயன்படும்.

    அப்பயன்பெற ஆன்மீகச் சட்டங்கள், காலம், இடம், முறை, தகுதியுண்டு.
  - ✫ **எல்லாத் தகுதிகளும் எல்லோருக்கும் இருப்பதுபோல் ஆன்மீக தீட்சையளிப்பது அன்னை தரிசனம்.**

*தொடரும்.....*



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## (35) Seeing the Force Conscious
## சக்தியை ஜீவனுள்ளதாக அறிவது

டென்னீஸைப்பற்றி ஒரு புத்தகம் எழுதினால் அதில் பந்து, ராக்கட் எப்படியிருக்கும்என விளக்கப்பட்டிருக்கும். வலை, கோர்ட் அளவுகள் தரப்பட்டிருக்கும். அதனுடைய ரூல்ஸ் வரிசையாக எழுதப்பட்டிருக்கும். அதில் எதுவும் புரியாமலிருக்காது. என்னஎன மனதில் தட்டுப்படாது. டென்னீஸ் கற்றுக் கொள்ள அது பெருமளவுக்குப் பயன்படாது.

அதைப் படித்தபின் டென்னீஸ் விளையாடுவதைப் பார்த்தால் உடனே அனைத்தும் புரியும். எந்தச் சந்தேகமுமிருக்காது. படித்ததும், படிக்காததும் மனதில் படும். அதனால் டென்னீஸ் ஆட வாராது. ஆடுவது வேறு. ஆடுவதில் *(1)* கற்றுக் கொள்வது, *(2)* ஜெயிப்பது, *(3)* பந்தயத்தில் ஜெயிப்பது, *(4)* மாவட்டம், மாநிலம், இந்தியா, விம்பிள்டனில் ஜெயிப்பதுஎன்ற கட்டங்களுண்டு.

*The Life Divine* யோகத்தைப்பற்றிய நூல். டென்னீஸைப் பற்றி படித்து அறிவதுபோல் யோகத்தைப்பற்றி அறியலாம். புரிந்தால் அந்த அறிவு ஏற்படும். அன்பராக அன்னையை ஏற்பது, ஏற்றபின் *The Life Divine* படிப்பது, டென்னீஸ் ஆடுவதைப் பார்ப்பதுபோல். நாமே அன்னையை ஏற்றதால் புத்தகம் கூறுபவை புரியும். ஆட்டத்தைப் பார்த்தால் ஆட முடியாது என்பதுபோல், அன்பராவதால் யோகம் புரியாது, செய்ய முடியாது. அதற்கு யோகத்தை மேற்கொள்ள வேண்டும். அதன் கட்டங்கள் பல. *(1)* ஏற்பது, *(2)* பலிப்பது, *(3)* ஞானத்தில் பலிப்பது, *(4)* வாழ்வில் பலிப்பது மற்றும் *(5)* உடலில் பலிப்பது.

- ஏற்பது அன்பராவது.
- பலிப்பது, ஒரு பிரார்த்தனை தவறாமல் பலிப்பது.
- ஞானத்தில் பலிப்பது *The Life Divine*இல் உள்ள 1452 பாராக்களில் உள்ள 1452 கருத்துகளும் தெளிவாகப் புரிவது. அத்துடன்
  - புத்தகத்தின் மையக் கருத்து.
  - அத்தியாயங்கட்குள்ள தொடர்பு.
  - பரம்பரையிலிருந்து ஸ்ரீ அரவிந்தம் மாறிய இடங்களின் சூட்சுமம், இரகஸ்யம்.
  - ஞானம் சித்தியாகும் பாதை (insight, intuition) மூலம் திறந்து வழிவிடுவது ஆகியவை பலிப்பது.
  - ஆரம்ப சித்திகள் அனைத்தும் பலிப்பது (சென்ற 34ஆம் நம்பர் கட்டுரையில் உள்ள 10 கருத்துகள்) ஸ்ரீ அரவிந்தம் வாழ்வில் பலிப்பதாகும்.

- உடலில் பலிப்பது அன்னை செய்த யோகத்தை மேற்கொள்வது.
- சக்தி ஜீவனுள்ளதாக ஒருவர் அனுபவித்தால் அவருக்குப் பூரணயோக வாயில் திறந்து மேற்சொன்னவற்றில் அவருக்குரியது பலிக்கும்.
- **சக்தி ஜீவனுள்ளதுஎன்றால் Silent Will பலிப்பது, நினைத்தது நடப்பது, உடல் புல்லரிப்பது போன்றவையாகும்.**
- பள்ளிக்கூடமில்லாத நம் கிராமத்திற்குப் பள்ளிக்கூடம் வரும்பொழுது அதேபோன்ற கிராமங்கள் அனைத்தும் பள்ளி பெறுவது, நமக்குக் கிடைப்பது நம்போன்ற அனைவர்க்கும் கிடைப்பது சக்தி ஜீவனாவதற்கு அடையாளம்.

*தொடரும்.....*

❀ ❀ ❀





# ஞானப்பால்

சமர்ப்பணன்

ஐந்தாம் வகுப்பில் கணக்கு ஆசிரியை பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது, அவரை பார்க்க அலுவலக அறையில் யாரோ காத்துக் கொண்டிருப்பதாக பியூன் தாத்தா வகுப்பிற்குள் வந்து சொன்னார்.

“எல்லோரும் முதல் நாலு கணக்குகளையும் சத்தம் போடாமல் பண்ணிக்கிட்டு இருங்க. நான் அஞ்சு நிமிஷத்திலே வந்திடறேன். மல்லிகா, நீதானே லீடர்? யாராவது ஒழுங்கா இல்லன்னா பேரை எழுதி வை. வந்து பேசிக்கிறேன்” என்றவாறு கணக்கு ஆசிரியை வகுப்பைவிட்டு வெளியே போனார்.

கணக்கு ஆசிரியை பயங்கரவாதி. அதனால் சிவாவைத் தவிர எல்லா மாணவ, மாணவிகளும் மூச்சு விடும் சத்தம் கூட வெளியே கேட்காதவாறு கணக்குப் போட ஆரம்பித்தனர்.

பத்து வயதான சிவா ஓவியப்பித்து பிடித்தவன். தடிமனான ஓர் ஓவிய நோட்டு அவனது உடலின் ஒரு பகுதி. எங்குப் போனாலும் அதைத் தூக்கிக் கொண்டு அலைபவன். ஒரு நிமிடம் அவகாசம் கிடைத்தாலும், அதை விரித்து ஏதாவது வரைய ஆரம்பித்து விடுபவன், ஐந்து நிமிடங்கள் கிடைத்தால் சும்மா இருப்பானா?

“சிவா, கணக்குப் போடு, படம் போடாதே” என்றாள் மல்லிகா.

“அப்படித்தான் போடுவேன், நீ என்ன பண்ணிடுவே?” என்ற சிவா தோகை விரித்தாடும் மயில்படத்தை வரைவதில் மும்முரமானான்.

“உன் பேரை எழுதிடுவேன்” என்றாள் மல்லிகா.

“எழுதேன், எனக்கென்ன பயம்?” என்ற சிவாவிற்கு திடீரென்று கோபம் வந்தது. “உனக்கு படம் வரையத் தெரியாது. கோழி மாதிரி கிறுக்குவே. அதனாலே உனக்கு என்மேலே பொறாமை” என்றான்.

சிறிது நேரம் கழித்து மல்லிகா கடுமையான குரலில் எச்சரித்தாள். “சிவா, நீ இப்போ கணக்குப் போடப் போறியா

இல்லையா?''

''உங்கப்பா பெரிய ஆளுன்னு டீச்சருங்கதான் உன்னைப் பார்த்து பயப்படுவாங்க. நான் பயப்பட மாட்டேன்'' என்று சிவா குத்தலாகச் சொல்லவும் சில மாணவர்கள் சிரித்தனர்.

''என்ன சிரிப்பு?'' அதட்டிக் கொண்டே கணக்கு ஆசிரியை வந்தார்.

''மிஸ், சிவா கணக்குப் போடாமல் படம் வரையறான்'', அவனிடமிருந்து ஓவிய நோட்டைப் பறித்த மல்லிகா அதை ஆசிரியையிடம் கொடுத்தாள்.

''அவன் தலையிலே மூணு தடவை குட்டு வை. படிக்கிற வயசிலே படம் என்ன வேண்டிக் கிடக்கு?'' என்றார் கணக்கு ஆசிரியை.

சிவா தலையில் இலேசாகக் குட்டினாள் மல்லிகா.

''சத்தமே கேட்கலையே! எப்படிக் குட்டணும்னு உன் தலையிலே சொல்லித் தரவா? உங்கப்பா பணக்காரர்னா எனக்கென்ன?'' என்று மல்லிகாவை மிரட்டினார் கணக்கு ஆசிரியை. பாவம், சரியாகச் சம்பாதிக்காத தன் கணவர் மீது என்ன கோபமோ!

பயந்துபோன மல்லிகா, தன் பலத்தையெல்லாம் திரட்டி சிவாவின் தலையில் 'நங்'கென்று ஓங்கிக் குட்டினாள். அவளுக்கு விரல்கள் வலித்தன. அவனுக்கு தலையும், மனமும் வலித்தன.

''அப்படித்தான், இன்னும் ரெண்டு போடு'' என்றார் கணக்கு ஆசிரியை.

மூன்றாவது குட்டு மிகவும் வலிக்கவும், ''அம்மா!'' என்று தலையைப் பிடித்துக் கொண்டு முனகினான் சிவா. எல்லா மாணவர்களும் சிரித்தனர்.

ஆரவாரத்தைக் கேட்டு வராண்டாவில் நடந்து போய்க் கொண்டிருந்த தலைமை ஆசிரியர் வகுப்பிற்குள் எட்டிப் பார்த்தார்.

நாற்காலியிலிருந்து எழுந்து கொண்ட கணக்கு ஆசிரியை, ''சார், இந்த சிவா பாடத்தை கவனிக்காமல் படம் போடுறேன் என்று கிறுக்கிக் கொண்டிருந்தான். விசாரித்தால் எதிர்த்து பேசுறான், அதான்....'' என்றபடி சிவாவின் ஓவிய நோட்டை பவ்யமாக நீட்டினார்.

''இந்தக் காலத்துப் பசங்களுக்கு எதுக்கு முக்கியத்துவம்



தரதுன்னே தெரியலே! சின்ன வயசிலேயே தறிகெட்டுப் போறானுங்க. நோட்டு என் கிட்டயே இருக்கட்டும்'' என்றவர் வகுப்பை விட்டு வெளியே நடந்தார்.

அந்த நிகழ்ச்சி சிவாவைத்தவிர அனைவராலும் அந்த நிமிடமே மறக்கப்பட்டது. அடுத்து நடந்த இரண்டு வகுப்புகளும் அவன் காதுகளில் பொருளற்ற ஓசையாக ஒலித்தன. வகுப்பில் தனியாகக் குட்டு வாங்கிய அவமானம். தன் வலியைக் கண்டு பிறர் சிரித்த அவமானம். ஆசிரியரிடம் திட்டு வாங்கிய அவமானம். இவற்றையெல்லாம் கூட பொறுத்துக் கொள்ளலாம். ஓவிய நோட்டு பறிபோன துயரம்தான் தாங்க முடியவில்லை.

உணவு இடைவேளையின் போது எல்லோரும் சாப்பிட்டுவிட்டு விளையாடப் போய்விட்டனர். சிவா தனியாக வகுப்பறையில் சோகமே உருவாக உட்கார்ந்திருந்தான். மல்லிகாவையும், ஆசிரியர்களையும், சக மாணவர்களையும் எப்படிப் பழிவாங்குவதென்று புரியவில்லை. கோபமும், அதை வெளிப்படுத்த முடியாத பலவீனத்தால் எழுந்த வருத்தமும் அவன் பிஞ்சு முகத்தை வாடச் செய்திருந்தன.

சிவாவை யாரும் கடுமையாக நடத்தியதில்லை. இரண்டாவது வகுப்பு படிக்கும்போது அம்மாவிடம் ஒரே ஒரு முறை குட்டு வாங்கி இருக்கிறான். ஏதோ ஒரு பண்டிகைச் சமயத்தில் சாப்பிடாத தெய்வங்களை திருப்திப்படுத்த நெய் மணக்க அதிரசம் சுட்ட அம்மா, மறுநாள் படையல் முடிந்தபின்தான் அதை சாப்பிடலாம் என்ற சட்டத்தை அமல்படுத்திவிட்டு தூங்கப் போய்விட்டார். அதுவரை பொறுக்க முடியாத சிவா இரண்டு அதிரசங்களை யாருக்கும் தெரியாமல் எடுத்துச் சாப்பிட்டுவிட்டான். சட்டைமேல் சிந்திக் கொள்ளாமல் சாப்பிட்டிருந்தால் அம்மாவிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கமாட்டான். பிட்டுண்ட பித்தனான சிவனுக்கு அரசனின் பொற்பிரம்பால் பளீரென்று அடி கிடைத்தது. அகிலத்திற்கே வலித்தது. அதிரசமுண்ட சிறுவனான சிவாவிற்கு அம்மாவின் கையால் நறுக்கென்று குட்டு கிடைத்தது. அவனுக்குமட்டும் வலித்தது. அதற்கு பின் சிவா யாரிடமும் திட்டோ, குட்டோ வாங்கியதில்லை.

''என்ன தம்பி, ஏன் தனியா உட்கார்ந்திருக்கே? உன் கூட்டாளிங்க எல்லாம் எங்கே? அழறியா என்ன?'' வகுப்பை கூட்டிப்

பெருக்கும் ஆயாவின் கரிசனமான விசாரிப்பு, அவனது மனவலியை சிறிது கூட்டிப் பெருக்கித் தள்ளியது.

''மல்லிகா கெட்டவள். இன்னிக்கு என் தலையிலே ரொம்ப ரொம்ப வலிக்கிற மாதிரி மூணு தடவை ஓங்கி குட்டினாள்'' என்றான் சிவா. சொல்லும்போதே அவமானத்தில் கண்களில் கண்ணீர் ஊறியது.

''ஐயோ பாவம், கொஞ்ச நேரத்திலே சரியாப் போயிடும்'' என்று அவனது தலையைக் கருணையோடு தடவித் தந்த ஆயா, ''நம்மளோட பழகுறவங்க எல்லாருமே நல்லவங்கதாம்பா. யாரும் கெட்டவங்க இல்லை. ஒருத்தங்க விடாம நமக்கு நல்லதுதான் பண்ணுவாங்க. நாம உள்ளுக்குள்ளே மத்தவங்க மேல கோவமா இருந்தா, அவங்க நமக்கு கோவமா நல்லது பண்ணுவாங்க. உள்ளுக்குள்ளே அன்பா, சந்தோஷமா இருந்தா நமக்கு சந்தோஷமா நல்லது பண்ணுவாங்க'' என்று ஆறுதல் கூறியவாறு தன் முந்தானையால் அவன் கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

தலையை ஆட்டினான் சிவா.

ஆயா சம்பந்தனுக்கு ஞானப்பாலூட்டும் உண்ணாமுலையம்மன் என்ற உண்மை அவனுக்கும் தெரியாது, ஆயாவிற்கும் தெரியாது.

மதியம் தமிழ் வகுப்புத் தொடங்குமுன் மல்லிகாவின் அருகே சென்று நின்றான் சிவா. அவன் தன்னோடு சண்டை போட வந்திருக்கிறான்என்ற எண்ணத்தில், முகத்தில் கடுமையை வரவழைத்துக் கொண்டு மல்லிகா அவனைப் பார்த்தாள். இவர்கள் இருவரும் போடப்போகும் சண்டையைப் பார்க்க சில மாணவ, மாணவிகள் தயாராயினர்.

''உனக்கு சரியா படம் வரைய வராதில்லே? இனிமேலே நான் உனக்கு போட்டுத் தரேன்'' என்று சொன்னான் சிவா.

மல்லிகாவின் முகத்தில் இறுக்கம் விலகி மலர்ச்சி தோன்றியது. ''காலையிலே நான் வேணுமின்னு குட்டலை. டீச்சருக்கு பயந்துதான் அப்படிப் பண்ணிட்டேன். இன்னும் வலிக்குதா?'' என்று கவலையோடு கேட்டாள்.

''அப்பவே வலிக்கலையே'' என்று சொன்னான் சிவா.

''என் பக்கத்திலேயே உட்காரேன்'', பக்கத்திலிருந்த வேறொரு



மாணவனுக்கு இட மாற்ற உத்தரவைக் கொடுத்துவிட்டு, தன்னருகே சிவாவை உட்கார வைத்துக் கொண்டாள் மல்லிகா.

''என் மேல் கோவமா இருக்கியா?'' என்று கேட்டாள் மல்லிகா.

''ம்ஹூம்'' என்று மறுத்தான் சிவா.

இதே பாணியில் இருவரும் சிறிது நேரம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த போது மணி அடித்தது. தமிழாசிரியர் உள்ளே நுழைய, கூடவே தலைமை ஆசிரியரும் நுழைந்தார்.

முப்பது குரல்கள் ஒரு குரலில் ''வணக்கம் அய்யா'' என்று அவர்களை வரவேற்றன.

''எல்லோரும் உட்காருங்கள்'' என்று வகுப்பிலிருந்த ஒரே நாற்காலியில் உட்கார்ந்து கொண்ட தலைமை ஆசிரியர் கூற, தமிழாசிரியர் தவிர, அனைவரும் உட்கார்ந்தனர்.

''சிவா'' என்றார் தலைமை ஆசிரியர். பயத்துடன் எழுந்து நின்ற சிவாவை அருவே அழைத்து ஓவிய நோட்டை அவன் கைகளில் தந்தார்.

''கொஞ்ச நேரத்திற்கு முன்னாலே மல்லிகாவோட அப்பா வந்திருந்தார். யதேச்சையா என் மேஜை மேலே இருந்த உன் படத்தைப் பார்த்தவர் நம்ம பள்ளிக்கூடப் பையனுக்கு இப்படி ஒரு திறமையான்னு பிரமிச்சுப் போய்ட்டார். உன்னை ஆர்ட் ஸ்கூலில் சேர்த்துவிட்டு அதுக்கான எல்லாச் செலவையும் அவரே பார்த்துக்கப் போறாராம். அடுத்த மாசம் பெங்களூரிலே படம் வரையிற போட்டி நடக்கப்போகுது. நம்ம பள்ளிக்கூட சார்பா உன்னை அனுப்பச் சொல்லி இருக்கார். நாளைக்கு உன் அப்பாவை இங்கே வந்து என்னைப் பார்க்கச் சொல்'' என்றார் தலைமை ஆசிரியர்.

தலையை ஆட்டினான் சிவா.

''ரொம்ப சந்தோஷம் சார். அவருக்கு தாராள மனசு சார். பணமும், மனமும் சேர்ந்து இருக்கிறது அபூர்வம் சார்'' என்றார் தமிழாசிரியர்.

''மல்லிகாவைப் பத்தி விசாரிச்சார். நல்ல சூட்டிகையான பெண். பள்ளி மாணவர் தலைவி வேலையை அபாரமாக பண்ணுகிறாள் என்று ஒரு போடு போட்டேன். அவருக்கு ஒரே சந்தோஷம்'' என்றார் தலைமை ஆசிரியர்.

‘‘சார், மல்லிகா வகுப்புத் தலைவிதான்’’ என்று தயக்கத்துடன் சொன்னார் தமிழாசிரியர்.

‘‘என்னய்யா இது, நான் வாய் தவறி அப்படி சொல்லி விட்டேனே! விஷயம் தெரிந்தால் தப்பாக நினைத்துக் கொள்ளப் போகிறார்’’ என்று ஒரு நிமிடம் கவலைப்பட்ட தலைமை ஆசிரியர், ‘‘இதென்ன பிரமாதம், மல்லிகா, இன்னிக்கிருந்து நீதான் பள்ளித் தலைவி. அப்பாகிட்டே மறக்காமே சொல்லிடணும், தெரியுதா?’’ என்றார்.

‘‘சரி சார். ஆனால் நான் யாரையும் குட்டமாட்டேன்’’ என்றாள் எழுந்து நின்ற மல்லிகா.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

அவர்கள் ஏன் சிரித்தார்கள் என்று சிவாவிற்குப் புரியவில்லை. பிடிக்கவுமில்லை. ஆனால் ‘‘நம்மளோட பழகுறவங்க எல்லாருமே நல்லவங்கதாம்பா. யாரும் கெட்டவங்க இல்லை. ஒருத்தங்க விடாம நமக்கு நல்லதுதான் பண்ணுவாங்க. நாம உள்ளுக்குள்ளே மத்தவங்க மேல கோவமா இருந்தா, அவங்க நமக்கு கோவமா நல்லது பண்ணுவாங்க. உள்ளுக்குள்ளே அன்பா, சந்தோஷமா இருந்தா நமக்கு சந்தோஷமா நல்லது பண்ணுவாங்க’’ என்ற ஆயாவின் வாக்கு அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

*முற்றும்.*

❀ ❀ ❀

**ஜீவிய மணி**

**வலி உடலுக்கன்று; மனத்திற்கு.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# இராமபிரான்

தாமரை காலையில் மலர்ந்து, மாலையில் வாடும். சித்திரத்தில் எழுதிய தாமரை வாடாது, என்றும் மலர்ந்திருக்கும். இராமனை காட்டுக்குப் போஎன்றபொழுதும், பட்டம் கட்டிக்கோ என்றபொழுதும் முகம் சித்திரத்தாமரையாக வாட்டமறியா-திருந்தது கம்பர் வர்ணனை.

- ***அது மனிதனால் முடியாது.***
- ***அந்த மனம் முனிவர் மனம்.***
- ***முனிவர் கோபமும், சாபமும் பிரபலமானவை.***
- அப்படி மாறாதிருந்த முகமலர் பெற்றது வனவாசம்.

அவதாரப் புருஷன் முகமலர்ச்சி மாறாமல் நல்லதையும், கெட்டதையும் ஏற்பது அவதாரத்தால்தான் முடியும். மனிதனால் முடியாது. பூரண யோகத்தில் மனிதனிடம் அது எதிர்பார்க்கப்படு-கிறது. அப்படி மனிதனிருந்தால் வந்த பிரச்சினை விலகும்.

- மாறாத மனநிலை, வாடாத முகம் சூழலை மாற்றும்.

  வந்த பிரச்சினையை விலக்கும், வாய்ப்பாக மாற்றும்.

1/3 பங்கு கூட்டாளிக்கு அது போன்ற நேரம் வந்தபொழுது வாடாத முகம் முழுகூட்டாளியாக்கியது அவரை. இது அன்பர் அன்றாடம் பெறும் அனுபவம்.

**அன்னை அருள் அவதாரப் புருஷனைவிட அன்பரை உயர்வு பெறச் செய்கிறது.**

❀❀❀

# கிருஷ்ண பரமாத்மா

18 நாள் போரில் தினமும் வென்றவர் பாண்டவர். அவ்வெற்றியைப் பெற்றுத் தந்தது கிருஷ்ண பரமாத்மா. உலகம் பொய்யால் வாழ்வதால் மெய்யை, தர்மத்தை நிலைநிறுத்த பரமாத்மா பொய்யைக் கையாள வேண்டியிருந்தது. தினமும் அதைச் செய்ய வேண்டியதாயிற்று.

➵ **அன்பர் நிலையென்ன?**

பகவானும், அன்னையும் பிறந்தபின் உலகம் மாறியுள்ளது.

1956இல் நரகம் அழிந்துவிட்டது.

சத்தியஜீவிய சக்தி உலகைச் சூழ்ந்துள்ளது.

பொய்யை எதிர்க்கும் அன்பருடைய மெய் வெல்லும், பொய்க் கலப்பில்லாமல் வெல்லும்.

இராமபிரான் ஆயுதம் தாங்கி அசுரனை எதிர்த்தார்.

பரமாத்மா போர்க்களம்சென்று ஆயுதமில்லாமல் வென்றார்.

***பகவான் போர்க்களம் போகாமல் அசுரனை அழித்தார்.***

அன்பரை பொய் கேஸாகத் தாக்கும்பொழுது கலப்படமற்ற மெய் வெல்வதை அன்பர்கள் தினமும் அவரனுபவத்தில் காண்கின்றனர்.

- பொய்க்கேஸ் தள்ளுபடியாகிறது.
- பொய்க்கேஸ் வாதாடிய வக்கீல் உயிரை எடுக்கிறது.
- பொய்க்கேஸ் போட்டவர் உலகை விட்டுப் போகிறார்.
- அவதாரப்புருஷன், பரமாத்மா பெறாத உதவி அன்பர் அன்னையிடமிருந்து பெறுகிறார்.

❀❀❀

May 2010 Jiviyam 16 Malar 01
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11


புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | ரூ.100/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள் | ரூ.100/- |

*தமிழாக்கம்:* என். அசோகன்

| | |
|---|---|
| SATYA JYOTHI | ரூ.200/- |

(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191